சத்தியவேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 15-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 40-ம் இலக்கம்

18-10-59 விசுவாசப் பரப்புதல் ஞாயிறு

மிஷன் நாடுகளுக்கு ஏன் உதவிசெய்ய வேண்டும்? ஏனெனில்,

மிஷன்நாடுகள் — அதாவது வேதபோதகநாடுகளுக்கு நாம் ஏன் உதவிசெய்யவேண்டும்?

ஏனெனில், நமது திவ்விய கர்த்தாவும், ஆண்டவருமான யேசுக்கிறீஸ்துநாதரின் ஈருந்த மரணசாதனம் அதுவாகும். "ஆகையால் நீங்கள்போய்ச் சகல சாதிசனங்களுக்கும் உபதேசித்து: பிதாவுடையவும், சுதனுடையவும், இஸ்பிரீத்து சாந்துவுடையவும் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் அனுசரிக்கும்படி அவர்களுக்குப் போதியுங்கள்"(மத்தேயு 28: 19-20).

ஏனெனில், திருச்சபை கடந்து போன காலங்களில் அவ்வாறே செய்துவந்திருக்கிறது. அதைச் சேர்ந்தவர்களில் நீரும் ஒருவர் அல்லவா? அதனால்நீரும் உதவி செய்ய வேண்டுமென்பது பூமியிலே கிறீஸ்துநாதரின் பதிலாளியாகவிளங்கும் பரிசுத்தபிதாவின் ஆர்வமானவிருப்பமும், ஆவலுமாகும்.

ஏனெனில், விசுவாசிகள் சகலராலும் ஆதரித்துத் தாபரித்து உதவிசெய்யப்பெற்றுவரும் மிஷனரிமார்கள் உமது உதவியால் தேவனுடைய திராட்சைத் தோட்டத்தில் ஆச்சரியகரமான தொண்டுகளை ஆற்றிவரமுடியும்.

ஏனெனில், பிறமத்தியில் யேசுவின் திருஇருதயத்தை அறிந்துகொள்ள உதவிசெய்வதைக் காட்டிலும் அவருக்கு உண்மையான பக்திபற்றுதலைக் காண்பிப்பதற்கு அதிகம்சிறந்தவழிவகை வேறொன்றுமில்லை.

ஏனெனில், நமது மிஷன்கள்- அதாவது வேதபோதகநாடுகளில் விசுவாசப்பரப்புதலுக்குத் தற்போதுஇருந்துவரும் நல்லசந்தர்ப்பங்கள் கடந்தநூற்றாண்டுகளில் இருந்தவற்றைக்காட்டிலும் அதிகமாய் இருக்கின்றன.

ஏனெனில், சகலசாதிசனங்களுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்குமாறு தமதுசிஷர்களுக்குக் கிறீஸ்துநாதர் கற்பித்துப் 19நூற்றாண்டுகள்சென்றும் உலகில் இன்னுமே அவரைஅறியாதவர்களும், அவருடையதிருச்சபையில் சேராதவர்களுமாய் 1003 கோடி மக்கள் இருக்கின்றார்கள்.

ஏனெனில், உங்கள்முன்னோர் ஓர்காலம் கிறீஸ்துநாதரை அறியாமலும், அவருடைய இரட்சணியதிருமறையில் சேராமலும் இருந்தார்கள். அவர்கள் வேதபோதகநாடுகளைக் கொண்டு நடத்திய தங்கள்உதவிஒத்தாசையாலே அக்காலத்து விசுவாசிகளால் மனந்திரும்பப்பட்டார்கள்.

ஏனெனில், விசுவாசத்தைப் பரப்புவதில் நீங்கள்செய்யும் தொண்டுகளுக்குத் தக்கதாக உங்கள்திருவேதத்தின்மட்டிலே உங்களுக்குள்ள பற்றுதல் அதிகரிக்கும்.

ஏனெனில், நீர் ஓர்கத்தோலிக்கராய் இருக்கின்றீர். இன்னுமே அஞ்ஞானஅந்தகாரத்தில் இருந்துவருகிறவர்களை மனந்திருப்புவதற்குப்போதியவரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொடுக்கக் கூடியவராய் இருக்கின்றீர்.

ஆகவே, மனந்திருப்புவதாகிய மகத்தான திருத்தொண்டில் ஈடுபட்டிருக்கும் மிஷனரிமார்கள் ஆற்றிவருகின்ற பெருந்தொண்டுகள் செபத்தாலும், பரித்தியாகக் கிரிகையாலும், மனத்தாராளமாய்க் கொடுக்கும் பணத்தாலும் முன்னேற்றமடையச் செய்வீராக!

மரணதண்டனைநிறுத்த சட்டம்

மரணதண்டனையை நிறுத்திவைக்கும்படி அரசாங்கம் மூனைர் செய்துள்ள சட்டத்தை அகற்றிவிடுமாறு தயாரிக்கப்படும் புதிய சட்டத்தைச் சனப்பிரதிநிதிகள் சபை இம்மாதம் 27-ந் திகதியன்று கூடும்போது நீதி அமைச்சரின் பாராளுமன்றக் காரியதரிசி அதிலே கொண்டுவருவாரென எதிர்பார்க்கப்படுகிறது. அவசரகாலநிலைமையிலே செய்யப்படும் கொலைக்குற்றங்களுக்கு இரக்கம் காட்டப்படாதென்றும அரசாங்கம் பொதுவாக முடிபுசெய்திருக்கிறது.

நாங்களும் ஏன் அவளைப்போல்.....

உலகிலுள்ள கத்தோலிக்கர் எத்தனைபேர்? உலகிலுள்ள 250 கோடிமக்களில் 40கோடிபேர் மாத்திரம் கத்தோலிக்கர். ஆனால், எங்கள்அரிய இரட்சகர் இவர்கள் எல்லோருக்குமாக மரிக்கவில்லையா? ஆம்,அவர் இவர்களுக்காகவும் உயிர்துறந்தார். ஆனால்,நாங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்கும் அலுவலில் அசமந்தராய்ப் போய்விட்டோம்.

யேசுவின்சின்னமலர் புனிததெரேசாள் தன்னைப்பற்றிச் சொல்லியதைக் கேளுங்கள்! "உலகமுடிவுபரியந்தம் எவ்வளவு ஆன்மாக்கள் இரட்சிக்கப்படவிருக்கின்றனவோ அதுவரையும் என்னால் இளைப்பாற்றியெடுக்க முடியாது."

இவள் கிறீஸ்துவின் சித்தத்துடன ஒன்றித்திருந்தபடியால் இப்படிக்கூறநேர்ந்தது. இதையொட்டியே இவள் மிஷன்நாடுகளின் பாதுகாவலாளியாக வந்துள்ளாள். நாங்களும் ஏன் அவளைப்போல் கிறீஸ்துவின்வீரர்களாகவரக்கூடாது? இன்றைய உலகிற்குத் திரும்பவும் கிறீஸ்துவின் அரியபோதகத்தைப் புகுத்துவதற்கு நாம் அப்போஸ்தலராய் வரவேண்டும்.

"நான்உலகிலுள்ள யாவரையும் மீட்கவேவந்தேன், சகலரும் என்னிடம் உறைவிடம் ஆகுமளவும்யான் இளைப்பாறேன்.....ஆதலால் சகலசாதிசனங்களிடமும் சென்று திவ்வியவேதத்தைப் போதித்து அவர்களுக்கு ஞானஸ்நானம்கொடுங்கள்."

ஐப்பசிமாதத்தில்வரும் கடைசிஞாயிறுக்குமுந்தியஞாயிறே மிஷன்ஞாயிறுஎன அழைக்கப்படும். இது வேதப்பரப்புதலின் கருத்தைவிளக்கவும், இன்னும் இக்கருத்திற்காகச் செபம்செய்யவும், பணம்உதவவும் ஸ்தாபிக்கப்பட்டது.

திருச்சபைதனதுபாலிய பருவத்திலிருக்கும் இடங்களைத்தான் மிஷன்நாடுகள்என்று அழைக்கின்றோம்.

அக்கருத்திற்காக நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? இதோ ஓர்வழி!

செபம்—யேசுவின் திராட்சத்தோட்டத்திற்கு அதிகமான வேலையாட்களை அனுப்பும்படி செபிக்கவேண்டும்.

ஒறுத்தல்— உங்கள் ஒறுத்தல்களும், தற்பரித்தியாகங்களும் அதிகவல்லமை உடையன.

உதவி— சிறியபண உதவியும், மிஷன்நாடுகளுக்கு உதவுவதற்காக ரூமைக்கு அனுப்பப்படுகிறது.

சேருங்கள்—விசுவாசப்பரப்புதல் சபையில் அங்கத்தினராக இன்றேசேருங்கள்.

நண்ப!—இன்று மிஷன் ஞாயிறு. வேதப்பரப்புதல் ஞாயிறு. இதைப்பற்றிக் கேள்விப்பட்டதுண்டா? வேதம்பரம்பும் மிஷன்நாடுகள் இருப்பதை நீர் அறியும்படி வருடத்தின் 52 கிழமைகளில் ஒருஞாயிறைப் பரிசுத்தபிதா தெரிந்துகொண்டார்.

திருமறை ஒளி எங்கும் பொழிக! இருண்ட நிலை ஒழிக!

மட். தாண்டவன்வெளித் தபால்

ஆண்டு நிறைவு தினம்

ஐப்பசித்திங்கள் 12-ம்நாள் வெள்ளி வாரம். காலைப்பொழுதின் இன்பசூழ் நிலையில் கிளென்னி ஆண், பெண்கழகங் களின் ஆசிரியர்களும், மாணவர்மாணவி களும், பத்திச்சபைகளைச்சேர்ந்தவர் களும், பங்குக்கிறீஸ்தவர்களுமான பல் வேறு குழுவினரும் கோவிலில் சமுகமாக, "எங்கள்சுவாமி" வண. ஜி. ஈ.எல். வம்பேக் அவர்கள்தமது 45-வது பிறந்தபெருநாளைப் பாட்டுப்பூசையு டன் ஆரம்பித்தார். பெருந்திரளா னோர் திருவிருந்தருந்தி, அவரதுநலன் களுக்காக வேண்டிக்கொண்டனர். பூசைமுடிவில் பத்திச்சபைகளைச்சேர்ந் தோர் அவரைச்சந்தித்து உரியஉப சாரஞ்செய்து நல்வாழ்த்துக்கூறி நன் மொழிகேட்டு நல்லாசீர்பெற்றேகினர்.

அன்றுகாலை 9 மணியளவில் வாத்தி யம் முழங்கிக்கொண்டிருக்கையில் கிளென்னி ஆண்,பெண்கழகங்கள் இர ண்டிலும் ஆனந்தஆர்ப்பரிப்புக் காணப் பட்டது. இரண்டினதும் மாணவர் மாணவிகளும், ஆசிரியர்களும் வரிசை யாகக் குருமனைசென்று அங்கு அகில இலங்கைத் தமிழாசிரியர்சங்கத் தலை வரும், கிளென்னி ஆண்கள்கழக அதிப ருமான ஆசிரியமணி கே. லா. இரா சேந்திரன் அவர்கள் ஜனனவிழாநாய கருக்குக் காகோஷங்களிடையே மலர் மாலைசூட்டினர்.

அதன்மேல்சுவாமிகளை ஊர்வலமாக அழைத்துச்சென்று, ஆண்கள் கழக முன்றிலில் அமைத்துள்ள கொடித்தம் பத்தினருகே கூடியதும், முறைப்படி விழாநாயகர் பாப்பரசர் கொடியை ஏற்றிவைக்க, பாப்பரசர்கீதம் பாடிய பின் யாவரும் ஆண்கள்கழக மண்ட பத்தை அடைந்தனர். ஆங்கு இரு கழகங்களின் தலைமை ஆசிரியர்களும் விழாநாயகரை நடுவிடமாகக்கொண்டு உயராசனத்தில் அமர்ந்ததும் வாழ்த் துப்பண்கள் படிக்கப்பட்டு, இருகழ கங்களினதும் ஆசிரியர்கள்சார்பில் அன் பளிப்புகள் வழங்கப்பட்டன.

பின்னர், ஆண்பாடசாலை அதிபர் திரு. கே. லா. இராசேந்திரன் அவர்கள் குருத்துவத்தின் மகிமையை—கிறீஸ் தவனைப்பிறந்ததுமுதல்மண்ணில்மறை யும்வரை ஒருவர்குருவானவரோடு சம் பந்தப்படும் பல்வேறுசந்தர்ப்பங்களை— விழாநாயகரின் அயராதசேவையைப் பாராட்டிச் சிறந்த ஓர்சொற்பொழி வாற்றினர். தொடர்ந்து பெண்கள் கழகஅதிபர் திருமதி ஈ. ஏ. ஈசதன் அவர்கள், குரவர்அவர்கள் தேவமாதா போல் பங்கில் செய்துவரும் சீரிய தொண்டுகளை விரித்து, எல்லோரும் மாதாபக்தியில் வளரவேண்டியதன் அவசியம்பற்றியும், குரவர் புரிந்துள்ள அளப்பரும் தொண்டுகளைப்பற்றியும் குறிப்பிட்டு நல்வாழ்த்துக் கூறினர். ஈற்றில் விழாநாயகர் ஆசிரியர்கட்கும், மாணவர்மாணவிகட்கும் நன்மதிகள் கூறி, ஆசீர்அளித்து மிட்டாய்கள் வழங்கினர்.

பகல்முழுவதும் குடும்பங்குடும்பமா கப் பங்குக்கிறீஸ்தவர்களும், ஊர்ப்பிர முகர்களும், அன்பர்களும் சுவாமிக ளைச்சந்தித்து வாழ்த்துக்கள் சமர்ப் பித்து, அன்பளிப்புகள்செய்து ஆசீர் பெற்றேகியவண்ணம் இருந்தார்கள். இப்பங்கிலுள்ள வயோதிபர் ஸ்தாபன கன்னியர்களும், வயோதிபர்களும் சுவாமிகளை வரவழைத்து வாழ்த்துப் பண்கள்பாடி, சிறந்த உபசரணை நடாத் தினர்.

இல்ல விளையாட்டுப்போட்டி :

பிற்பகல் 2-30 மணிக்கு விழாநாய கரைக் கௌரவிக்குமுகமாக இரு கழ கங்களிலும் இல்ல விளையாட்டுப் போட்டிஒன்று அவற்றின் விளையாட்டு மைதானமான "வம்பேக் பசுந்திட"ரில் இப்பகுதிக்காரியாதிகாரி திரு. எஸ். எம். தியோப்பிலஸ் அவர்கள் தலைமை யில் நடைபெற்றது. குறித்த நேரம் வந்ததும் அம்மைதானக் கொடித்தம் பத்தில் எமது முகாமைக்காரரான விழாநாயகர் கழகக்கொடியை ஏற்றி வைத்தனர். பின்னர் இருகழகங்களி னதும் அதிபர்களும், விழாநாயகரும் மாணவர்மாணவிகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றனர். அதன்மேல் காரியாதிகாரி அவர்களையும், பாரியா ரையும் விளையாட்டுப்போட்டிக்குத் தலைமைவகிக்கும்படி வரவேற்றுத் தலை வரவர்கட்கு ஆண்கள்கழகஉதவிஆசிரிய ருள் ஒருவரான செல்வன் எஸ். அரு ளப்பு கந்தசாமி அவர்களால் மலர்மாலை அணிவித்தும், அவர் பாரியாருக்குப் பெண்கள்கழக உதவி ஆசிரியைகளில் ஒருவரானதிருமதி ஏ.அன்ரனிப்பிள்ளை அவர்களால் மலர்ச்செண்டளித்தும், உபசரித்ததும்போட்டிஆரம்பமாயிற்று. மைதானத்தில் இக்னேஷியஸ் இல்லம் (மஞ்சள்) ஜோர்ஜ் இல்லம் (நீலம்) இரண்டும் தனிப்பெரும் சிறப்புடன் தங்களுக்குரிய வர்ணங்களுடன்காட்சி யளித்தன. இல்லத்தவர்களும் தங்க ளுக்குரிய வர்ணச்சின்னங்களை விநி யோகித்தும், அந்தந்தவர்ணக் குளிர் பானங்களை வழங்கியும் வந்தனர்.

போட்டியிலே சிறுவர் விளைதை உடைப்போட்டி, தயிர்ப்பானை உடைத் தல் போட்டி, தேங்காய்துருவல் போட்டி, ஆசிரியர்சங்கீதப் பார்சல் என்பன ரசிகர்களின் கவனத்தை அதிகம் கவர்ந்தன. ஈற்றில் தலைவர் அவர்கள் நன்மதிகளும், நன்றியுரை யும்கூறினர். போட்டியின் தலைவர் செல்வன் எஸ். அருளப்பு கந்தசாமி ஆசிரியர் அதனைச் சிறப்புடன்நடாத்த மிக்கான உதவிகள்புரிந்த விழாநாயக ருக்கும், மெதடிஸ்ற்மிஷன் முகாமைக் காரர் எஸ். ஏ. செல்வநாயகம்அவர்கட் கும், வெள்ளிக்கிண்ணங்கள் வழங்கிய பெரியார்களுக்கும், பணஉதவிபுரிந்த அன்பர்களுக்கும், இருகழகங்களின தும் அதிபர்கள், உடன்ஆசிரியர்களுக் கும், மத்தியஸ்தர்களுக்கும், பெற்றூர்க் கும், பிரமுகர்கட்கும், இல்லங்கட்கும் நன்றியுரை கூறிநின்றார். பின்னர், திருமதி தியோப்பிலஸ்அவர்கள் போட் டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு வெள் ளிக்கிண்ணங்களையும், பரிசில்களையும் வழங்கினர்.

இக்னேஷியஸ் இல்லம் (மஞ்சள்) 140 புள்ளிகளைப்பெற்று, முதலிடம் வகித்து எஸ். ஏ. செல்வநாயகம் வெள்ளிக்கிண்ணத்தைப் பெற்றது. ஜோர்ஜ் இல்லம் (நீலம்)வம்பேக் வெள் ளிக்கிண்ணத்தைப் பெற்றது. பின்னர் இருகழகங்களினதும் ஆசிரியர்கள் ஒன்றுகூடி, ஒருதேநீர் விருந்தருந்திப் பிந்தத்தங்கள் முகாமைக்காரருடன் ஓர் உல்லாசவிருந்து நடாத்தி மகிழ்ந்தார் கள்.

— நிருபர்

கிராம முன்னேற்றசங்க

ஸ்தாபகம்

நாஞட்டான் கிழக்கு, மழுவராயர் கட்டையடம்பன் கிராமத்தவர்கட்குச் சென்ற 23-9-59 புதன்கிழமை முக்கி யமான ஓர்தினம். மக்களின் ஒற்று மைக்கும், சமூகசேவைக்கும் அத்தி வாரம் இடப்பட்ட சுபதினம். கிராமத் தலைவர் உட்பட கிராமமுன்னேற்ற சங்க உத்தியோகத்தர்களின் பேருதலி யாலும், ஆசிரியர் வே. இராயப்பு அவர்களின் பெருமுயற்சியாலும், இங்குஅன்று தினம் கிராமமுன்னேற்ற சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

"சங்கங்களின்மூலமே பொதுமக் கள் தங்களின் பலவிததேவைகளையும், சலுகைகளையும் அரசினரிடமிருந்து பெற்றுவரும் இக்காலத்தில் சங்கங்க ளின் தலையானசங்கமாகிய கி. மு. சங் கத்தை அமைப்பதில் நீங்கள் எல்லோ ரும் ஒற்றுமைபூண்டு திடமாக வந்தி ருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது" என்று கூட்டத்திற்குத் தலைமைதாங் கிய ஆசிரியர் இராயப்பு அவர்கள் கூறினர்.

அவர் தொடர்ந்துபேசுகையில், சங் கம் பெயரளவிலன்றிச்—செயலளவி லும் நடைபெறவேண்டுமானால் விசே டமாகக் கிராமப்புறங்களில் வழமையா கவுள்ள அறியாமை, பொறுமை, இல் லாமை என்பன அகலவேண்டும்; அத ற்கு முதலாமையான பொறுமையை ஒழித்துத் தூயஉளத்துடன் தொண் டாற்றுவோமானால், மற்றும் அறியா மையும்,பொருளில்லாமையும்—மெல்ல மெல்ல ஒழிந்து நாடு கல்வி, கைப்பொ ருள், சுகாதாரம்போன்ற சகலவசதிக ளையும் பெற்றுமிளிரமுடியும் என்று கூறினர்.

பின்னர் உரையாற்றிய மன்னர் மாவட்டப் பால்கீலியப் பரிசோதகர் திரு. ஏ. புண்ணிய புஷ்பராஜசிங்க அவர் கள் சங்கத்தின்நோக்கத்தையும், அதன் மூலம் மக்கள் எவ்வித நன்மைகளை அரசினரிடமிருந்து பெறலாம்என்பது பற்றிய உண்மையையும் எடுத்துக் காட்டி, இச்சங்கம் நன்குவளர்ந்து பலன்தரவேண்டுமென ஆசித்து நின் றார்.

ஈற்றில் பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய் யப்பட்டனர். தலைவர்: ஆசிரியர் திரு. வே.இராயப்பு. உபதலைவர்: திரு.வே. விசுவாசம். காரியதரிசி: திரு. அ. பேதுறு. உபகாரியதரிசி: திரு. ப.அந் தோனிப்பிள்ளை. தகுதிகாரி: திரு. அ. அந்தோனிப்பிள்ளை.

காரியதரிசி அவர்களின் நன்றியுரை யுடன் கூட்டம் இனிதேமுடிவுற்றது.

— நிருபர்

கத்தோலிக்க தமிழாசிரியர் சங்கம்

நீர்கொழும்பு, பெரியதெரு

நீர்கொழும்பு, பெரியதெரு அர்ச். அற்புதமரியாயகி விசாரணைப்பங்கைச் சேர்ந்த நிரந்தரஆசிரியர்களினதும், இப்பங்குப் பாடசாலைகளில் பணியாற் றும் ஆசிரியர்களினதும் சமூகபி விருத்திச்சங்கம் சென்ற 4-10-59 ஞா யிறுவாரம்மாலை தேவநற்கருணைஆசீர் வாதத்தின்பின் 5-30மணியளவில் கட் டளைக்குரவர் வண. ஸ்ரனிஸ்லாஸ் பெர் னாண்டோபிள்ளை சுவாமியவர்கள் தலை மையிலே சென்மேரிஸ் ஆங்கிலகல்லூரி மண்டபத்தில் பலஆசிரியர்கள், ஆசிரியைகள் சமுகமாக ஆரம்பமாயது. வண. தலைவர்சுவாமிகள் தமது முன் னுரையிலே அதிமேற்றிராணியாண்டவ ரது அனுமதியுடனும், ஆசீர்வாதத்துட னும் எமதுபங்கில் இச்சங்கத்தைத் தொடங்கியது நல்லஓர்அறிகுறியாகும்; நானும் எனதுஒத்துழைப்பை அருளு வேன்; ஆசிரியர்கள் உற்சாகஉணர்ச்சி யுடன் இச்சங்கத்தை நடத்தவேண்டு மெனக் கேட்டுக்கொள்ளுகிறேனெனக் கூறினார்.

இப்படியான சங்கம்ஒன்றை உரு வாக்கி, அதன்நன்மையை அனுப வித்து, ஆசிரியர்களைத் திருச்சபையின் அப்போஸ்தலராக்க வேண்டுமென்று தாம்கண்டகனவு நனவாகியதால் மகிழ்ச்சியடைவதாகக் கூறிய வண. உதவிக்குரவர் ஜே. மைக்கல்சவரிமுத்து சுவாமியவர்கள் சங்கநோக்கம்பற்றிப் பேசுகையில்: ஆசிரிய தொண்டின் மகத்துவம், ஆசிரியர்கள்தங்களில் பொதிந்து மலர்ந்துகிடக்கும் சக்திகளை எவ்வாறு தம்பணிகளில் எடுத்தாளச் சந்தர்ப்பம்வாய்க்கும், பிள்ளைகளின் உள்ளங்களை உருவாக்கும் சமூகப்பணி திருச்சபைக்கும், தேசத்துக்கும் எவ் வளவு துணைபுரிகிறது, ஆசிரியர்கள் அப் போஸ்தலிக்க தொண்டுக்குத்தெரிந்து கொள்ளப் பட்டவர்களாகவே, தங்களை இவ்விலட்சியங்களில் பூரணப்படுத்தித் தங்கள்கையில் ஒப்படைக்கப் பட்ட மாசற்றபிள்ளைகளுக்கு வழிகாட்டிகளா கத் திகழவேண்டும், இலங்கைத்திருச் சபைச் சரித்திரப்படி நீர்கொழும்புமக் கள் திருச்சபைக்குச்செய்துள்ள அளப் பரியதொண்டுகள் என்பனபற்றி ஆழ மான கருத்துகள்பொதிந்த உருக்க மான ஓர்அரும்பெரும்உரை நிகழ்த்தி னர்.

அதன்மேல் சங்கபோஷகராக வண. கட்டளைக்குரவரும், தலைவராக வண. உதவிக்கட்டளைக்குரவரும் ஏகமனதா கத் தெரியப்பட்டனர். பின்பு உபதலை வராகச் சென்மேரிஸ் தமிழ்ஆண்பாட சாலைத் தலைமைஆசிரியர்போல் இம்மா னுவேல் பெர்னாந்துஅவர்களும், செய லாளராகக் கொழும்பு, மாதம்பிட்டியா அர்ச். அந்தோனியார் பாடசாலைத் தலை மைஆசிரியர் ஜே. விஸ்திரீனி பெரேரா அவர்களும், உபசெயலாளராகச் சென் மேரீஸ் ஆங்கிலகல்லூரி ஆசிரியர் அலெக்சியாப் பொன்னுத்து அவர்களும், பொருளாளராகச் சென்மேரீஸ் தமிழ்ப் பெண்பாடசாலை ஆசிரியை எத்தல் கோஸ்தா அவர்களும் தெரிவுசெய்யப் பட்டனர். நிருவாகஅங்கத்தவர்தெரிவு பின்போடப்பட்டது. சங்கத்தின் பாது காவலராகப் "பரிசுத்தகன்னிமரியாய், அப்போஸ்தலரின் இராக்கினி" தெரிந் தெடுக்கப்பட்டார். பின்பு, உபதலைவ ரது நன்றியுரையுடனும், வண. தலைவர் சுவாமிகளின் ஆசீர்வாதத்துடனும் கூட்டம் இனிதுமுடிவடைந்தது.

— நிருபர்

புத்தக மதிப்புரை

தேம்பாவணி ஆராய்ச்சி

ஆக்கியோன்:
ஜே. ஜி. சுந்தரம்
(முன்னாள் தலைமைத் தமிழாசிரியர்)

பிரசுரம்:
தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி.

விலை: 75 நயா பைசா.

தமிழ்இலக்கியத்தில் ஒருபுதியதிருப் பம் ஏற்பட்டுள்ளது. திறனுய்வுமுறை யில்பண்டைத்தமிழ்இலக்கியங்களுக்கு ஆராய்ச்சிகள் எழுதப்பட்டு வருகின் றன. தமிழ்மொழியின் மறுமலர்ச் சிக்கு இம்முயற்சி பெரிதும் துணை யளித்துள்ளது.

இம்முறையைப் பின்பற்றி வீரமா முனிவரின் சொல்லோவியமாகிய தேம் பாவணிக்கு ஓர் ஆராய்ச்சி நூலாகத் திகழுமாறு பேராசிரியர் ஜே. ஜி. சுந்த ரம் அவர்கள் இந்நூலை எழுதியுள்ளார் கள். "தேம்பாவணியின் சிறப்பு" என்ற தலைப்பில் ஆசிரியர் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரமாகவே இந் நூல் தயாரிக்கப்பட்டு இப்பொழுது இரண்டாம் பதிப்பாக வெளிவந்திருக் கிறது. இதன்கண் தேம்பாவணியின் சொற்சுவை, பொருட்சுவை என்பன ஒழுங்குமுறையாக ஆராயப்பட்டுள் ளன. அத்தோடு செய்யுள்களின் யாப்பமைதி குறித்தும் விளக்கப்பட் டுள்ளது. எனவே, இச்சிறுநூல் பதிப்புரையில் கூறப்பட்டிருப்பதுபோல் "தேம்பாவணியைக் கல்லாதார் கற் றுணரத்தக்க பொருளையும், கற்றுணர்ந் தோர் களிக்கத்தக்க கருத்தையும்" தன்னுளடக்கியுள்ளது. மூல நூலைப் படித்தறிய வாய்ப்பற்றவர்களுக்கு வீர மாமுனிவரின் கவித்திறனைச் சுவைத் தறிய இந்நூல் பெரிதும் பயன்படும் என்பது எமது பெருநம்பிக்கையாகும். எமக்கனுப்பிய பிரதிக்காக நன்றிகூறு கின்றோம்.

"ஒற்றுமையினம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம் பை அழிக்கும்."

திருச்சபைப் பொதுச்சங்கம்

திருச்சபைப் பொதுச்சங்கம் நடைபெறும்காலம் இன்னுமே அறிவிக்கப்படாத போதிலும் 1961-ம் ஆண்டில்தான் அதுநிகழுமென்றும், சரியானகாலமும், தேதியும் அடுத்தவருடம் அதிகாரமுறையிலே அறிவிக்கப்படுமென்றும் தற்போது கருதப்படுகிறது. சங்கம்நடக்குமிடம் அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயமாய் அன்றேல் அர்ச். லத்தறன் அருளப்பர் மகாதேவாலயமாய் இருக்கும்என்று நம்பப்படுகிறது. திருச்சபைப் பொதுச்சங்கங்களின் சரித்திரத்திலே இவ்விருமகாதேவாலயங்களும் அவற்றிற்குப் பாவிக்கப்பட்டிருக்கின்றன. மேற்கிலே முதலாவது பொதுச்சங்கம் 1123-ம்ஆண்டு லத்தறன் மகாதேவாலயத்தில் நடைபெற்றது. கடைசியான பொதுச்சங்கம் 1870-ம்ஆண்டின் வத்திக்கான் பொதுச்சங்கமாகும்.

பாப்பரசர் வத்திக்கானுக்குத் திரும்பினர்

அருளப்பபாப்பரசர் காஸ்தெல் காந்தல்போவிலுள்ள தமது வேனிற்கால மாளிகையிலிருந்து பன்னிரு இத்தாலிய மோட்டர் சைக்கிள்பொலிசர் பரிவாரமாகச் செல்ல வத்திக்கானுக்குத்திரும்பியிருக்கின்றார். அவர் திரும்பும் வழியிலே ரோமாபுரியினூடாகச் செல்வதற்குப்பதில் ஓர்பக்கவீதி வழியாகச் சென்பீற்றர் ஆஸ்பத்திரிக்குச்சென்று, அங்கு ஓர்நோயாளியாக இருந்து வருகின்ற திருச்சடங்காசார திருச்சங்க காரியதரிசியான கறின்லி அதிமேற்றிராணியாரைச் சந்தித்து, அவருடன் ஏறக்குறைய இருபது நிமிஷங்கள் செலவிடலாயினர். தமது வேனிற்காலமாளிகையிலே இருமாதகாலம் தங்கியிருந்தபின்னர் காஸ்தெல் காந்தல்போவை விட்டு அவர் வெளிகொண்டபோது, ஆயிரக்கணக்கானகிராமமக்கள் அவரைவாழ்த்தி வழியனுப்பி வைத்தார்கள். அங்கே அவர் இருமாதங்களிலும் இரண்டுலட்சம்மக்களுக்குப் பொதுப்பேட்டியும், இன்னும் அநேகருக்குப் பிரத்தியேகபேட்டியும் அளித்திருக்கின்றார்.

ஐக்கியநாடுகள் சபையின் புதிய தலைவர்

எட்டுப்பிள்ளைகளின் தந்தையும், பதினெட்டுப் பேரப்பிள்ளைகளைக் கண்டவரும், தினமும் திவ்வியபூசைகண்டு வருகிறவருமான பெருவிய நாட்டைச்சேர்ந்த டக்றர் விக்றர் அன்ட்றெஸ் பிலோண்டிஅவர்கள் ஐக்கியநாடுகள் பொதுச்சபையின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பெற்றிருக்கின்றார். இவர் சர்வதேசசட்டசாஸ்திரத்தில்மிக்கான அறிவு படைத்தவர். பெருநாட்டின் கத்தோலிக்க சர்வகலாசாலை உபதலைவராக விளங்கியிருந்தவர். அமைதிக்கும், ஆரோக்கியத்துக்குமாகத் தினமும் குறைந்தபட்சம் இருதடவை சிரிப்பதற்குத் தாம்முயற்சியெடுத்துக்கொள்வதாகஇவர்கூறுகிறார்.

அர்ச். 10-ம்பத்திநாதரின் உதவியைநாடும் குருவானவர்

தற்போது 99வயதுடையவரான வண. பியெற்றோ பென்வெனூத்தோ சுவாமியாருக்கு இந்த உலகில் இப்போதுள்ள ஈரூந்தவிருப்பம் யாதெனில், தம்முடைய கோவிலுக்கு ஓர் புதியமணிக்கோபுரம்—அதாவது தம்முடைய 100-வதுவருடபிறந்த பெருநாளன்று மணிகள்அடிபடுவதைத் தாம்கேட்கத்தக்கதாய்த் தமதுகோவிலுக்குப் புதியமணிக்கோபுரம்ஒன்று அமைக்கப்படவேண்டுமென்பதே. வண. பியெற்றோசுவாமியார் கடந்த 57 ஆண்டுகளாக வெனிஸ்நகருக்குவடகிழக்கேயுள்ள சான்ற் ஒடோறிக்கோ தி சாஸிலிஎனும் இத்தாலியகிராமத்தின் பங்குக்குரவ'ராக இருந்துவருகின்றார்.

1-வது உலகயுத்தத்தில் இந்தக் கிராமம் ஆஸ்திரியர்களால் படையெடுக்கப்பட்டது. 2-வது உலகயுத்தத்திலே அதன்பெரும்பகுதி வெடிகுண்டுகளால் சேதமடைந்தது. இந்தயுத்தம் முடிந்தபின் சுவாமியார் தமது கிராமவாசிகளின் வீடுகளைத் திரும்பக்கட்ட உதவிசெய்வதில் கடுமையாக உழைத்தார். 1953-ம் ஆண்டு திரும்பக்கட்டிய தமதுகோவிலை அபிஷேகஞ்செய்தார். இன்னும் எஞ்சியிருப்பதெல்லாம் கோவில் மணிக்கோபுரமே. கோவில்மணிகள் ஏதோவிதமாய் அப்போது காப்பாற்றப்பட்டு விட்டன.

சென்ற வைகாசிமாதம் அர்ச். 10-ம்பத்திநாதரின் புனிதஉடல் வெனிஸ்நகர் கொண்டுசென்று ஒருமாதகாலம் பூச்சியமாகவைக்கப்பட்டிருந்தபோது, சுவாமியாரும் அங்குசென்று அதற்குத் தமது வணக்கவழிபாட்டைச் சமர்ப்பித்தார். 1903-ம் ஆண்டு—அதாவது வெனிஸ்நகரின் பத்திறியார்க்குவான ஜூய்செப்பி சாத்தோ ஆண்டவர் 10-ம்பத்திநாதராய்ப் பாப்பானவராகத் தெரியப்படுவதற்குச் சிலமாதங்களின்முன் அவர் மேய்ப்பருக்குரிய விசாரணைநடத்தத்திசாஸிலிகிராமத்திற்குச் சென்றிருந்தபோது பியெற்றோசுவாமியார் அவரைத் தமதுகுருமனையில் வரவேற்றுநின்றார்

தாம் நன்கறிந்த அர்ச். 10-ம்பத்திநாதரது புனிதஉடலின் முன்பாகச் சுவாமியார் முழந்தாட்படியிட்டிருந்தபோது திரும்பவும் கோவில்மணிகள் அடிபடுவதைத் தாம்கேட்கத்தக்கதாகக்கோவில் மணிக்கோபுரத்தைக் கட்டியெழுப்புவதற்கு வேண்டியநிதியைத் தாம்கண்டுகொள்ள வழிவகைசெய்ய வேண்டுமென்று அவரைஉருக்கமாக மன்றாடிக்கொண்டார். சுவாமியாரின் 100-வதுவருட பிறந்தபெருநாள் அடுத்துநிகழும் 1960-ம் ஆண்டு பங்குனிமாதம் 19-ந்திகதியன்று வருகிறது.

—*—

போலாந்தில் நவீனவேத விரோத நடவடிக்கைகள்

போலாந்திலே கத்தோலிக்கதிருச்சபைக்கு விரோதமாகப் புதியநடவடிக்கைகளைப் போலிஷ் கம்யூனிஸ்தஅரசாங்கம் எடுத்திருப்பதாக லண்டன்நகரிலே செய்திகிடைத்திருக்கின்றது. இந்த நடவடிக்கைகளில் ஒன்று, தருமத்திற்கெனச் சேகரிக்கப்பட்ட நிதிகளுக்கு 60சதவிகிதம் வரிவிதிக்கப் பட்டிருப்பது. மற்றொன்று, போலிஷ் அதிமேற்றிராணிமாரும், மேற்றிராணிமாரும் வசித்துவருகின்ற இல்லங்கள் பஞ்சுவானவரிகளுக்குள்ளாகியிருப்பது. முன்பு அவர்களின் இல்லங்கள் சமயானுசாரங்களுக்கென உபயோகிக்கப்படும் கட்டடங்களெனக் கணிக்கப்பட்டு வரியின்றியே இருந்துவரலாயின. சில போலிஷ்மாகாணங்களில் வேதசாஸ்திர குருமடமாணவர்கள் இராணுவசேவைகளிலிருந்து இதுவரை தவிர்க்கப்பட்டிருந்தார்கள். ஆனால், இப்போதோ அவர்கள்தொடர்ந்து படிப்பதை நாஸ்திகபிரசாரம் தடுத்துவிடுமென்ற நம்பிக்கையின்பேரிலே அவர்கள் இருவருடகாலம் இராணுவசேவைபுரியவேண்டுமெனப் பலவந்தஞ்செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்னும் தங்கள்தாய்நாட்டிலே சமயத்தைஎதிர்த்துப் போராட்டம்நடத்துவதற்கு முன்னயத்தமாகப் பெருந்தொகையான போலிஷ்நாஸ்திகர்கள் பயிற்சிக்கென்று சோவியற்ரூஷியாவுக்கு அனுப்பிவைக்கப் பட்டிருக்கிறார்கள்.

சீனக்கருதினல் சொல்லுகின்றார்

சீனதேச பெய்ப்பிங்நகர் அதிமேற்றிராணியாராயிருந்த நாடுகடத்தப்பெற்ற கருதினல் தோமஸ் ரியென் ஆண்டவர் அன்று சிக்காகோநகரில் பேசியபோது: "சீனப்பொதுமக்களுக்கு அதிகம் கொடுமைகள்" செய்து கொடுங்கோலாட்சி நடத்திவந்த இருமுந்திய சீன இராசவம்சங்களைப் போல் அதேவிதமாகவே சீனக்கம்யூனிஸ்தஆட்சியும் கடைசியாக மறைந்துபோகுமென க் கூறியிருக்கின்றார். முதலாவது சீனக்கருதினலும், ஒரேயொரு சீனக்கருதினலுமான அவர் மேலும் பேசியவிடத்து: சீனவிலுள்ள இன்றையசிவப்பர்கள் சீனமக்களை— விசேஷமாய் அத்தேசத்தின் பாரம்பரியமான குடும்பஅமைப்பை அழித்துவிடுதற்கான தங்கள் பிரயத்தனங்களிலே சீனமக்களைக் குரூரத்தனமாக நடத்துவதில் சீன இராசவம்சங்களையும் மிஞ்சிவிட்டார்கள்; கி. மு. மூன்றும் நூற்றாண்டிலே சீன இராசவம்சம் சீனப்பெரியமதிலைக் கட்டியது; ஆனால், மக்கள்அதனை விரும்பாதகாரணமாக ஐம்பதவருடங்களுள் அந்த இராசவம்சம் வீழ்ச்சியடைந்தது; அதிலிருந்து எட்டுநூற்றாண்டுகளின்பின் சூய் இராசவம்சம் பலவந்தவேலையைக்கொண்டும், மிதமிஞ்சியவரிகளைக்கொண்டும் இராசாங்கக்கால்வாயை அமைத்ததின்மேல்இன்னும்அதிகம்குறுகியகாலத்தில் அதுஅழிந்துவிட்டதுஎனக் கூறலாயினர்.

பாப்பரசரது சகோதரியின் லூர்துபதியாத்திரை

அருளப்பபாப்பரசரின் சகோதரியான 72வயதுடைய அசுந்தா ரொங்கலிஅம்மையார் சமீபத்தில் லூர்துபதியைத் தரிசித்தஅநேகருள் ஒருவராயிருந்தார். அப்போது அத்திருப்பதியில் பெருந்திரளாகக் குழுமியிருந்த யாத்திரிகர் குழாங்களால் அறியப்படாமலும், அறிமுகப்படாமலும் அவர் மிலான் நகருக்குச் சமீபமான செஸ்தோசான் ஜியோவான்னி பட்டினத்திலிருந்துபோன மக்களுடன் அங்குசமூகமாயிருந்தார். அப்பட்டினத்தில் அசுந்தா தனதுவிவாகமான இருபுதல்வர்களுடன் சஞ்சரித்துவருகிறார்.

சீன அதிமேற்றிராணியார் பேசுகின்றார்

"இடையறாத குழப்பங்களாலும், சங்கடங்களாலும், அரசியல்விரோத கலகங்களாலும் சீனகம்யூனிஸ்தஆட்சி நெறிகடந்து, கவிழ்ந்துகொண்டிருக்கிறது; ஆலல், இதைப்பற்றிச் சுதந்திரஉலகம் ஏறக்குறையயாதொன்றும் அறியமாட்டாது" என்று சீனதேச நான்சிங்நகர் அதிமேற்றிராணியாராயிருந்து நாடுகடத்தப்பெற்ற போல்யுபின் ஆண்டவர் அன்று நியூயோக்நகரிலே தெரிவித்திருக்கின்றார். இதற்குப்பெரும்பாலும் காரணம், அநேககுடும்பங்களைக் குலத்துவிட்டிருக்கும் கம்யூனிஸ்த கூட்டுக்கமத்திட்டமே; வெள்ளப் பெருக்கென்றும், கொடுங்கானலென்றும் சமீபகாலத்தில்ஏற்பட்ட இயற்கைஅபாயங்களும்சீனவின்குழப்பநிலையை அதிகரிக்கச் செய்துவிட்டிருக்கின்றனவென்றும் அவர் கூறியிருக்கின்றார்.

பத்துக்கற்பனைகளின் படவிலக்கு

ஐக்கிய அமெரிக்கதேசத்தில் தயாரிக்கப்பெற்ற "பத்துக்கற்பனைகள்" என்ற சினிமாப்படத்தை ரூஷியாவிலே மக்களுக்குக் காண்பிப்பதைச் சோவியற் ரூஷிய அரசாங்கம் விலக்கிவிட்டிருப்பதாகத்திரு. ஈ. றிக்ஜோன்ஸன் அவர்கள் வாஷிங்ரனகரிலே தெரிவித்திருக்கின்றார். சினிமாப்படங்களின்ஸ்தாபனநிர்வாகியான இவர் அமெரிக்க-ரூஷிய சினிமாப்படங்களை இருநாடுகளிலும் மாற்றிக்காண்பிக்கும்உடன்பாடொன்றைச் சிலகாலத்தின்முன் சோவியற்ரூஷியாவுடன் செய்திருந்தார். இந்தஉடன்பாட்டின்படி, பத்துக்கற்பனைகளின் சினிமாப்படம் மஸ்கோநகரில் ரூஷியர்களின் சபைஒன்றில் காண்பிக்கப்பட்டபோது, ரூஷியாவில் காண்பிக்கச் சோவியற் ரூஷியா உடன்பட்ட பத்துஅமெரிக்கபடங்களில் இந்தப்படத்தைச்சேர்க்க மறுத்துவிட்டது. ஆனால், அதன் காரணத்தை அவர்கள் தெரிவிக்கவில்லை.

இறைவன் எமது உள்ளத்தில் இன்றேல் எமது பகல் இரவாகும்; அவர் இருப்பரேல் எமது இரவு எல்லாம் பகல்.

— அர்ச். பிராஸ்சிஸ் சேல்ஸ்

ஐப்பசி மாதம்

பொதுக்கருத்து: பொதுத்தியானப் பிரசங்கங்கள் இன்னும் அதிகமாகவும், அதிக பலனளிக்கும் வகையிலும் நடைபெறுவதற்காக வேண்டிக் கொள்வது.

வேதபோதக கருத்து: கிறீஸ்தவர்கள் அனைவரும் வேதபோதக நாடுகளின்மீது தங்களுக்குள்ள கடமையை முற்றும்அறிந்து, பலனுறஅதை நிறைவேற்றுவதற்காக மன்றாடிக் கொள்வது.

சத்திய வேத
பாதுகாவலன்
1959-ம் ஆண்டு
ஐப்பசி மாதம் 15-ந் திகதி

பரிசுத்த பாப்பரசரும் விசுவாசப் பரப்புதல் சபையும்

விசுவாசப் பரப்புதல்சபைஎன்பது எந்த ஒருவிசேஷப்பட்ட மிஷனரியசபைக்கும் உரியதன்று. ஆனால், பாப்பரசருக்கும், திருச்சபைக்குமே உரியதாகும். அஃது உலகின்எந்த ஒருகுழுவிற்கோ, அன்றேல் எந்தஒருபகுதிக்கோ சேவைபுரிவதன்று. ஆனால்,உலகமுழுவதற்குமே சேவைபுரிகின்றது. திருச்சபையில் இன்று முன்னூறு மிஷனரியசபைகள் இருக்கின்றன. ஆனால், ஒருமிஷனரியசபை மற்றெந்தமிஷனரியசபைக்கும் உதவிசெய்வதில்லை. ஒவ்வோர்சபையும் தனக்குரிய கடமைகளையும், கருமங்களையுமே கவனித்துவருகின்றது.

தனது பிள்ளைகளையெல்லாம் ஒருங்கேநேசித்து, ஒருங்கேபாதுகாத்து, ஒருங்கேபரிபாலித்துவரும் ஒருகுடும்ப பிதாவைப்போன்று, உலகமுழுவதிலும் பரந்திருக்கின்ற எழுநூற்றுக்குமேற்பட்ட பகுதிகளிலே விசுவாசப்பரப்புதல்தொண்டு ஆற்றிவருகின்ற 1லட்சத்து35ஆயிரம் மிஷனரிமார்களையெல்லாம்நேசித்துப் பாதுகாத்துப் பரிபாலிக்கவேண்டிய பொறுப்பைப் பரிசுத்தபிதா கொண்டிருக்கின்றார்.

ஏனெனில், அவர்தாமே மிஷனரிமார்களை நியமனஞ்செய்கின்றார். அவர்தாமே அவர்களை மிஷன்நாடுகளுக்கு அனுப்பிவைக்கின்றார். அவரிடமிருந்துபெறும் ஆணையில்லாமல் பிறநாடுஒன்றுக்கு மிஷனரிமார்எவரும் போகவியலாது. அதனால் இந்தமிஷனரிமாரிலே அதிகாரத்தைக்கொண்டிருக்கிறவர் அவர்களுக்குவேண்டிய உதவிஒத்தாசைகளைச் செய்வதற்கான வழிவகையையும் கொண்டிருக்கவேண்டியிருக்கின்றார். இதற்கென்றே அவர் விசுவாசப் பரப்புதலுக்கெனத் தமதுசபைஒன்றைக் கொண்டிருக்கின்றார். இதிலிருந்து இச்சபை பாப்பரசருக்கே உரியதென்பது நன்குதெளிவாகிறதன்றோ!

அதனால் விசுவாசப்பரப்புதல் சபைக்கென்று விசுவாசிகள் கொடுக்கின்ற ஒவ்வோர்சதமும் பாப்பரசரிடமே போகிறது. இச்சபைக்கென்று ஒருகால் கொடுபட்டபணத்திலே உலகிலுள்ள எந்தஒருமேற்றிராணியாரோ, அச்சபையின் மேற்றிராசனதலைவரோ, அன்றேல் தேசியதலைவரோகைதொடமுடியாது. அது பாப்பரசரது மிஷன்பொக்ஷாலையையே போய்ச்சேருகிறது. தம்மால்நியமிக்கப்படும் ஓர்கம்மிற்றிமூலம் அந்தப்பணத்தை அவரேமிஷன்களுக்குப் பகிர்ந்துகொடுக்கும் உரிமையைக்கொண்டிருக்கின்றார்.

திருச்சபையின் பொதுத்தேவைகள், அவசியங்களை விசுவாசபரப்புதல்சபைபொதுநோக்கிலே சிந்தித்துச் செயலாற்றுகின்றது. பிரான்ஸிய மிஷனரிமார்களுக்கே பிரான்ஸ்உதவிசெய்தால், டச்சுமிஷனரிமார்களுக்கே நெதர்லாந்து உதவிசெய்தால், அமெரிக்க மிஷனரிமார்களுக்கே அமெரிக்கா உதவிசெய்தால் மிஷன்களுக்கெல்லாம் என்னசம்பவிக்கும்? திருச்சபை ஒரோர் நாட்டிற்குரியதாகிப் பங்குபாகமாகிச் சுருங்கிப்போகும். இது முற்றுக நினைக்கத்தானும் முடியாததாகும். உதாரணமாக, பரிசுத்தபிதா இத்தாலியமிஷனரிமாருக்கே உதவிசெய்ய வேண்டியிருப்பார். ஆனால், அவர் நாடுபேதம்பாராது எல்லாவற்றிற்குமே உதவிசெய்ய வேண்டியவராய் இருக்கின்றார். அதனால் நாம்செய்யும் தியாகங்கள் முற்றுக ஒரேநாட்டு மிஷனரிமாருக்கு அல்ல, ஆனால், சகலநாடுகளையும் சேர்ந்த சகலமிஷனரிமாருக்குமே பயன்படுத்தப்படுகிறது.

பாப்பரசர் மிஷன்களின்தேவைகள், அவசியங்களை மற்றெவரிலும்பார்க்க நன்கறிவார். அவர் ஒருகாலம் விசுவாசப்பரப்புதல்சபையின் இத்தாலியதேசியதலைவராய் விளங்கியிருந்தார். அவர் விசுவாசப்பரப்புதல்சபையில் ஆர்வம்கொண்டவராய் உலகிலுள்ள ஐந்துகண்டங்களுக்குமாக ஐந்துகாரணிக்கங்களிலும் ஒவ்வொன்றை ஒப்புக்கொடுத்துத் தினமும் உலகமிஷன்செபமாலைசொல்லிவருகின்றார். "யேசுவின்திருஇருதயத்தில் மிகுந்தபக்திவைத்திருந்துவிட்டு மரணிப்பது மதுரமாயிருந்தால், அதேபோன்று மிஷன்களுக்கென ஒருவர் தம்மை அர்ப்பணஞ்செய்துவிட்டு மரணிப்பதும் மதுரமாயிருக்கும்"என்று அவர்கூறுகிறார். அதனால் பாப்பரசரின் விசுவாசப்பரப்புதல்சபைக்கென்று நம்மாலானஉதவிகள், தியாகங்களைச் செய்வோம். அங்ஙனம் கிறீஸ்துநாதரின் பதிலாளிக்குச்செய்வதைக் கிறீஸ்துநாதருக்கேசெய்வதாக மனதில்கொள்வோம்!

நிற்க,கம்யூனிஸ்தர்கள் எப்போதும் தியாகத்தையே பிரசங்கிக்கிறார்கள். சீனாவில் "கம்யூனிஸத்துக்கென்று தியாகங்களை" வகுத்திருக்கிறார்கள். சீனமக்களுக்கு ஆலோசனைகூறப்பட்டுள்ள தியாகங்களில் (1) புகைப்பதைவிட்டுவிடுவது. (2) சம்பளத்தை வாங்காமல்விடுவது. (3) சப்பாத்துகள்அணிவதைக் கைவிடுவது. (4) நாளொன்றுக்குப்பதினாறுமணித்தியாலம் வேலைசெய்வது (5) நாளொன்றுக்கு ஒருவேளைப்போசனத்துடன் சீவிப்பதுஎன்பன விசேஷப்பட்டனவாகும். இவ்வாறு அவர்கள் சாத்தானுக்காகத் தியாகங்கள் செய்யும்போது நாம் கிறீஸ்துநாதருக்காக — அவரின்திருவேதம் பரம்புவதற்காக அவர்களிலும் கூடிய தியாகங்களைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்என்பதை இந்தவேளையில்துணர்ந்து அவ்வாறுசெய்ய முன்வருவோமாக! கடமைக்குஅல்ல, ஆனால், கடமையைஉணர்ந்து செய்வோமாக!

அவசரகால சட்டத்தின்கீழ் அரசாங்கம் சென்ற 7-ந்திகதி புதன்கிழமைமுதல் பத்திரிகைச் செய்திக்குக் கடுமையானதணிக்கை செய்திருப்பதால் தணிக்கைகாலம் முடியும்வரை அரசாங்கநடவடிக்கைகள் பற்றியசெய்திகளை அறிவிக்கமுடியாதிருப்பதை வாசகநேயர்களுக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வாலெலியில்
கத்தோலிக்க நிகழ்ச்சி

வருகிற ஞாயிற்றுக்கிழமை (18-10-59) காலை8-15தொடக்கம் 8-30வரை இலங்கைவானொலி தேசிய ஒலிபரப்பில் "விசுவாசப்பரப்புதலின் மகத்துவம்"பற்றிய ஓர்நாடகம் வணமைக்கல் முத்துப்பிள்ளைசுவாமியவர்கள் தலைமைபின்கீழ் நடைபெறும்.

யாழ்ப்பாண
மத்திய நூல்நிலையம்

ஓர்காலம் இலங்கையிலே மிகச்சிறந்த ஒருநூல்நிலையமாகத் திகழுமென எதிர்பார்க்கப்படும் யாழ்ப்பாண மத்தியநூல்நிலையத்தின் முதலாவதுபகுதி சென்ற 11-ந்திகதி ஞாயிறன்றுமாலை சம்பிரதாயப்படி யாழ்ப்பாணமேயர் திரு. அல்பிறெட்துரையப்பாஅர்களால் திறந்துவைக்கப்படலாயிற்று. அதில் யாழ்ப்பாணப்பிரமுகர்களும், ஆசிய"பவுண்டேஷன்"ஸ்தாபன, ரூஷியஸ்தானீகராலய பிரதிநிதிகளும் திரளாகச்சமுகமளித்திருக்க, காலங்கண்டவைத்தியபெரியார் டக்டர் எஸ் சுப்பிரமணியம்அவர்கள் தலைமைவகிக்க, இசைநடனவிழாவுடன் திறப்புவிழாஆரம்பமாயிற்று. அவ்வேளை மேயர் அவர்கள் பேசியபோது: இந்நூல்நிலையதிட்டம் 1952-ம்ஆண்டிலேயே உருவானது; இப்போது பலருடையவும் இடையறாமுயற்சியின்பயனாகநூல்நிலையத்தின் ஒருபகுதி உருப்பெற்றுள்ளது; இது மக்களுக்குப் பெரிதும் உதவியாயிருக்குமென நம்புகிறேன் எனக்கூறினார். அரசாங்கஅதிபர் திரு.எம். ஸ்ரீகந்தாஅவர்கள் பேசியவிடத்து: ஒன்றுபட்டஉழைப்பின் காரணமாக இக்கனவுநனவாகிறது; தமிழ்மக்களின் பாரம்பரியத்திற்கு ஏற்றஓர்ஸ்தாபனமாய் இதுவிளங்குமெனக்கூறி மேயர் துரையப்பாஅவர்களின் அயராஉழைப்பைப் பாராட்டலாயினர். ஆசிய "பவுண்டேஷன்ஸ்தாபனம்" இந்தநூல்நிலையத்துக்கென ஒருலட்சம்ரூபாவுக்குமேல் உதவியிருக்கிறதுஎன்பது ஈண்டுகுறிப்பிடற்பாலது.

சுதேச வர்த்தமானம்

காணிமந்திரி பதவியேற்றார்

சுகவீனம்காரணமாக லண்டன்நகர் சென்று சிகிச்சைபெற்ற காணிஅபிவிருத்திமந்திரி திரு. சி. பி. டிசில்வா அங்கிருந்து விமானமூலம் சென்றசனிக்கிழமைகாலை கொழும்புவந்துசேர்ந்து, நேரேதனதுவீட்டுக்குச் சென்று சிறிதுவேளையின்பின் காலஞ்சென்றபிரதமருக்கு இறுதிமரியாதைசமர்ப்பிக்குமாறு ஹொறகொல்லைக்குப்போயினர். அதன்மேல் தஹாநாயகா மந்திரிசபையில் காணிஅபிவிருத்திமந்திரியாகப் பதவியேற்றார். சனப்பிரதிநிதிகள்சபையின் முதல்வராகவும் இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மிதக்கும் அவதானநிலையம்

ரூஷியாவின் "மிதக்கும் அவதானநிலையம்" என்றகப்பல் பம்பாயிலிருந்து கொழும்பைநோக்கி வந்துகொண்டிருக்கிறது. இந்த"மிதக்கும் அவதானநிலையம்" 580தொன்நிறைகொண்ட "சார்ஜர்"என்ற ஒருகப்பலாகும். இது பம்பாய்த்துறைமுகத்திலே பதினெட்டுநாட்கள் தங்கியிருந்தபின் சென்றவெள்ளிக்கிழமை கொழும்பைநோக்கிப்புறப்படலாயிற்று. இது ஏற்கனவே52,000மைல் சுற்றுப்பிரயாணஞ்செய்து பூமியின்காந்தசக்தியை அளவெடுத்துவந்திருக்கிறது. சர்வதேச பூபௌதீகவருடத்தின் அடிப்படையிலேயே ரூஷியா இந்தஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளது. தூரகிழக்குநாடுகளைச்சுற்றியும் இந்தக்கப்பல் 30,000மைல் பிரயாணஞ்செய்யும். இதுபம்பாய்த்துறைமுகத்திலே நின்றபோது மூவாயிரம் விஞ்ஞானபட்டதாரிகள் வரைசென்று இதிலுள்ள கருவிகளைநேரில்பார்த்தறிந்தார்கள்.

இறக்குமதிக் கட்டுப்பாடுகள்

விஷம்போல ஏறியிருக்கும் வாழ்க்கைச் செலவை இயன்றமட்டும் இறங்கச் செய்வதில் அரசாங்கம் கரிசனையெடுக்க வேண்டுமென்று பிரதமர் தஹாநாயகா சென்ற வெள்ளிக்கிழமை தமது மந்திரிமாரிடம் தெரிவித்திருக்கின்றார். மந்திரிமாருடன் அவர் இதுபற்றிக் கலந்தாலோசித்தபின் அத்தியாவசிய உணவுப்பொருட்களின் இறக்குமதிமீதுள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதென்று முடிபுசெய்யப்பட்டிருக்கிறது. அவ்விதம் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவேண்டிய உணவுப் பொருட்கள் எவையென்பதைத் தெரிவிக்கும்படி வர்த்தக மந்திரி கேட்கப்பட்டிருக்கின்றார். சுயேச்சையான இறக்குமதிமூலம் மாக்கெற்றுகளில் போதியளவு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கிடைக்கச்செய்யலாமென்றும், இதனால் விலைவாசிகளை வெகுவாகக்குறைக்க முடியுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்று இலட்சம் தொன் பர்மா அரிசி

இலங்கை வர்த்தக மந்திரியும், பர்மாவின் வர்த்தக அபிவிருத்தி மந்திரியும் சென்ற புரட்டாசி மாதம் 25-ந்திகதியன்று செய்துகொண்ட ஒப்பந்தப்படி, நான்குவருடகாலத்துக்குவருடந்தோறும் பர்மாவிடமிருந்து இலங்கை மூன்று இலட்சம்தொன் அரிசி வாங்கும். இதுபோல நான்கு வருடகாலத்துக்கு வருடந்தோறும் இலங்கையிடமிருந்து பர்மா எண்ணூயிரம் தொன் தேங்காய் எண்ணெய் வாங்கும். இலங்கையிடமிருந்து 5 இலட்சத்து 90 ஆயிரம்தொன் தேயிலையை வாங்குவதற்கும் பர்மாவின் வர்த்தகக் கோஷ்டி ஏற்பாடு செய்துள்ளதுஎன்று வர்த்தக மந்திரி காரியாலயத்தால் விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்று கூறுகின்றது.

விசுவாச ஒளிபரப்பும் திருப்பணிக்கு அணிவகுப்போம் வாரீர்!

புனிதவீரர் பக்கம்

வாசக நேயர்களுக்கு :

சென்றவாரம் (8-10-59) வெளிவந்த பாதுகாவலன் இதழின் "புனிதவீரர் பக்க" த்திலே வாசகநேயர்களுக்குத் தவருகப் பிரசுரிக் கப்பட்ட அறிவித்தலையிட்டு மிகவும் வருந்துகிறோம்.

அதிபர்,
சஞ்சுசை மாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

சின்ன மாகிறேற் எங்கே?

"இது செபமாலை மாதாவின் மாதம்" என்று சிஸ்றர் தெரேஸா கூறினர்.

"அப்படியானால் நாங்கள் புஷ்பங் கள் கொண்டுவருவோமா?" என்று கேட்டாள் மாகிறேற்.

"ஆம், நீங்கள் புஷ்பங்கள் கொண்டு வரலாம்; ஆனால், இந்த நாட்களிலே புஷ்பங்கள் கிடைப்பது அருமையாகும்" என்றார் சிஸ்றர் தெரேஸ்.

"ஆனால், வேறுவிதமான ஒரு புஷ் பம் இருப்பது எனக்குத் தெரியும்; இந்தப் புஷ்பத்தை நீங்கள் பறிப்ப தில்லை; ஆனால், அதைத் தினமும் நீங்கள் ஒப்புக்கொடுத்து வருகிறீர் கள்."

"அது என்னவென்று எனக்குத் தெரியும்சிஸ்றர்! நாங்கள் செபமாலை சொல்லலாம்; ஒவ்வோர் செபமும் ஓர் புஷ்பம்போல் இருக்கிறது" என் றான் தோமாஸ்.

"ஆம், தினந்தோறும் இந்தப் புஷ் பங்களைத் தேவமாதாவுக்குக் காணிக்கைவைக்க நீங்கள் விரும்பு கிறீர்களா?" என்றார் சிஸ்றர் தெரேஸா.

"ஆம், சிஸ்றர்" என்று எல்லாப் பிள்ளைகளும் சொன்னார்கள்.

"நான் ஒவ்வொருநாளும் கட்டா யம் செபமாலை சொல்லுவேன்" என் றாள் மாகிறேற்.

ஆனால், அவள் தான் சொன்னபடி செய்யவில்லை. ஒருநாள் அவள் களைப்பாய் இருக்கிறது என்று அதைச் சொல்ல மறுத்துவிட்டாள். மறுநாள் செபமாலை சொல்வதற்குப் பதில் விளையாடினாள். மற்றொரு நாள் வாலைலிக் கீதம் கேட்டுக் கொண்டு பொழுதுபோக்கினாள். இன்னொருநாள் ஒருபெரிய நாற்காலி யில் உட்கார்ந்து அயர்ந்து நித்திரை போய்விட்டாள்.

அயர்ந்தநித்திரையிலே மாகிறேற் அலங்காரமான ஓர் மாளிகையைக் கண்டாள். அதன் கதவைத் திறந்து உள்ளே பார்த்தாள்.

அதிகம் பிரபையான ஒரு பெரிய அறையிலே அழகுமிக்க ஓர் இராணி நின்றுகொண்டிருந்தாள். எவருமே அன்புகொள்ளக்கூடிய அவ்வளவு அழகியவளாய் அவள் காணப்பட் டாள். நீலமும், வெண்மையுமான உடைகளையே அவள் அணிந்திருந் தாள்.

அவள் ஓர் பக்கமாகத் திரும்பிய போது அவ செபமாலை இராக்கினி யான மரியாய் என்று மாகிறேற் அறிந்துகொண்டாள்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

பரிசுத்த
பாப்பரசர்
உங்கள் உதவியை
நாடுகிறார்.

அருமைச் சகோதரங்களே!

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (18-10-59) மிஷன்ஞாயிறு. அதை விசுவாசப் பரப்புதல் ஞாயிறு என்றும் சொல்லுகிறோம். திருச்சபை யாலே குறிப்பிடப்பட்ட ஒரு விசேஷமான ஞாயிற்றுக்கிழமை இது. பரிசுத்த பாப்பரசர் இத்தினத்திலே நம்மிடம் கேட்பது என்ன? கிறீஸ்துநாதருடைய இராச்சியம் பரவச் செபம், தபம், தருமம், விசு வாசப் பரப்புதல் சபையில் சேருதல் ஆகிய நான்கு கோரிக்கைகளுமே.

சிறுவர்களே! விசுவாசப் பரப்புதலுக்காக நீங்கள் எப்போதும் செபியுங்கள். சிறு ஒறுத்தல் முயற்சிகள் செய்யுங்கள். அடுத்தபடி யில் என்ன? 12 வயதுக்கு உட்பட்டவர்கள் பாலர் சபையிற் சேருங் கள் அதற்கு மேற்பட்டவர்கள் விசுவாசப்பரப்புதல் சபையில் உங் கள் பெயர்களைப் பதிவுசெய்யுங்கள். நீங்கள் எல்லோரும் பாலர்சபை யிலே அல்லது விசுவாசப்பரப்புதல் சபையில் சேர்ந்துவிட்டீர்களா? இல்லாவிட்டால் இன்றுதானே உங்கள் ஊரில் உள்ள பங்குக் குரவ ரிடஞ் சென்று உங்கள் பெயர்களைப் பதிவுசெய்யுங்கள்.

இனி என்ன செய்யவேண்டும்? தருமம் செய்யவேண்டும். எப் படி? "பொருள் மிகுந்தவர் பொற்குவை தாரும்; பணம் மிகுந்தவர் காசுகள் தாரும்" என்று கேட்கவில்லை. நீங்கள் இந்த ஞாயிற்றுக் கிழமையில் அன்றேல் இவ்வாரம் பாடசாலையிலோ, கோவிலிலோ பணம் திரட்டும்பொழுது, உங்களுடைய கைச்செலவுக்கு வீட்டிலே கொடுக்கப்படும் பணத்தைச் சட்டைச்சாக்கிலே பக்குவப்படுத்தி, மிட்டாய், கடலை போன்ற தின்பண்டங்களிலே செலவழிக்கும் பணத் தை மிச்சம்பிடித்து வேதப்பரப்புதலுக்குக் கொடுப்பது ஒரு பெரிய ஒறுத்தல் முயற்சியாகும்

நீங்கள் ஒவ்வொருவரும் விசுவாசப்பரப்புதல் சபையிலே எத்தனை அங்கத்தவர்களைச் சேர்த்திருக்கிறீர்கள் என்று நான் அறிய விரும்பு கிறேன்.

அண்ணை

சிறுகதை

கடவுள் இருக்கிறாரா?

[தொடர்ச்சி]

இப்படியே 17வருடங்கள் கழிந்து விட்டன சிங்கப்பூர் வாழ்க்கையில் தோல்வி அடைந்தவராய், வெறுப் புக்கொண்டவராய்த் தன் தாய்நாடா கிய இலங்கைக்கு மறுபடியும் திரும்ப லாயினர் திரு. சூசைப்பிள்ளை. இப்பொழுதும் கடல்மார்க்கமாகவே பயணம் செய்தார். பிரயாணத்தின் ஐந்தாவது இரவு. கப்பல் வங்காளக் குடாவின் மத்தியில் வந்துகொண் டிருந்தது. கப்பலில் நிம்மதியுடன் இருக்கமுடியவில்லை அவரால். அதே கடலில் அமிழ்ந்திய தனது பிள்ளை களின் நினைவு அவரைப் பேய்போல் வதைக்க விபரிக்கமுடியாத சஞ்சலத் தில் ஆழ்ந்தார். ஒருகால் அமைதி யின்றி உட்காருவார். பின் அங்கும், இங்குமாக உலாவுவார்.

இப்படி அல்லற்பட்டுக்கொண் டிருக்கும்போது தற்செயலாக அக் கப்பலில் பணியாற்றும் ஓர் இளம் பெண்ணைக் கண்டார். உடனே அவரதுசிந்தனை சுழலஆரம்பித்தது. தனதுமகள் உயிரோடிருந்தால் இப் படி ஓர் அழகியாகவே இருப்பாள் என்று மனதில் எண்ணிக்கொண்டு தனது துக்கத்தைத் தணித்துக் கொள்வதற்காகக் கப்பலின் மேற் தளத்துக்கு விரைந்தார். அங்கே அக்கப்பலின் தலைவன்—அதுவும் ஓர் இளைஞன் அவர்கண்களுக்குத் தென் பட்டான். அவருக்குத் தன் அரு மைப் பாலுவின் எண்ணம்தான் வந் தது. இக்காட்சிகள்யாவும் அவரை மேலும் வருத்தின. அவரது கண் கள் கடலைநோக்கின. தனது பாலர் இங்கல்லவா அமிழ்ந்தினர். நானும் இங்கு மாண்டுவிட்டால் என்ன? என்று எண்ணிப் பின்முன் பாராது கடலில் குதித்துவிட்டார். அடுத்த நிமிடம் அவ்விடத்தில் நின்றுகொண் டிருந்த ஓர் உருவம் நீரில் குதித்துத் திரு. சூசைப்பிள்ளையின் சடலத் தைத் தூக்கிக்கொண்டு கயிற்றேணி வழியாகக் கப்பலில் ஏறியது. முதற் சிகிச்சையும் செய்யப்பட்டுச் சூசைப் பிள்ளையின் உயிர் காப்பாற்றப்பட் டது.

ஒருநாட்காலை அதாவது, இரண்டு நாட்களின்பின் கொழும்புத் துறை முகத்திலிருந்து இருவர் வெளியே வந்துகொண்டிருந்தனர். அவர்கள்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

தெரிந்துகொள்ளுங்கள்

விசுவாசப் பரப்புதல் சபையினரால் உலகம் முழுவதும் திரட்டப் படும் பணம் பரிசுத்த பாப்பரசரால் கீழ்வரும் ஸ்தாபனங்களுக்குப் பங் கிட்டளிக்கப்படுகிறது.

1. 1,300 அனதசாலைகள்
2. 300குஷ்டரோகிகள் நிலையங்கள்
3. 6,000 வைத்தியசாலைகள், மருந்து கொடுக்கும் நிலையங்கள்
4. வயோதிபர் மடங்கள்
5. 60 000 பாடசாலைகள்.

விசுவாசப் பரப்புதல் சபையில் சேர்வோருக்காக ரோமாபுரி அர்ச். பேதுருவானவர் மகாதேவாலய பலி பீடத்திலே விசேட திவ்விய பூசைப் பலி ஒப்புக்கொடுக்கப்படுகிறது.

1,800 திவ்விய பூசைப்பலன்களில் பங்குபெறும் பாக்கியம் விசுவாசப் பரப்புதல் சபையோருக்கு உண்டு.

விசுவாசக்கொடி பட்டொளிவீசி எங்கும் பறக்கட்டும்!

நித்திய நகரமாகிய ரோமாபுரி

— லோகநாதன் —

(சென்றவாரத் தொடர்ச்சி)

இன்றையரோமாபுரி பழையரோமை, புதியரோமைஎன்று அபிவிருத்தி அடைந்து காணப்படுகிறது. புதிய ரோமாபுரி முழுவதையும் பார்க்கும் வாய்ப்பு எனக்குக்கிடைக்கவில்லை. ஆகவே, அதைப்பற்றி அதிகமாகஒன்றும் கூறுவதற்கில்லை. பழையபகுதி, புதியபகுதிஎன்று விரிந்துநிற்கும் ரோமாபுரியில் இருபதுலட்சம்சனங்கள் நிரந்தரமாக வசிக்கிறார்கள். ஆனல், பகல்நேரத்தில் ரோமைநகரின் சனத்தொகை முப்பதுலட்சத்திற்குமேலாகி விடுகிறதாம். சுமார்பத்துலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் அன்றுடன்று பகல் வேளை ரோமாபுரிக்குவந்துவிட்டு, இரவு நெருங்கியதும் தாங்கள்வசிக்கும் பக்கத்துஊர்களுக்குப் போய்விடுகிறார் களாம்

ரோமாபுரியின் முக்கியமானஒருசந் தியில் பெரியஊற்றுஒன்றை அமைத் திருக்கிறார்கள். அதில் கலையழகு மிக்க சிலைகள்இருக்கின்றன. அவ்வூற் றிலிருந்து நீர்சதாசிந்திக்கொண்டிருக் கின்றது. பகலிலிடஇரவில் இந்தவனப் புமிக்கஊற்று மின்சார ஒளிவெள்ளத் தில்மூழ்கித் தண்ணீரைத் தூவிக் கொண்டிருக்கும்காட்சி மனத்தைப் பெரிதும்ரம்மியப்படுத்துகிறதெனலாம். கம்பீரமான சிலைகளுடன் விளங்கும் இந்தஊற்றின் வட்டமானகைப்பிடிச் சுவர்மீது பலர்உட்கார்ந்து மகிழ்ச்சியு டன் பொழுதுபோக்குகிறார்கள். இந்த இடத்தில்சனக்கூட்டம் அதிகம். முக்கி யமான ஒருசந்தியாக விளங்குவதால் மக்கள் சதாநடந்துகொண்டிருப்பதை நாம்பார்க்கலாம். அந்தஊற்றுக்கு அருகேயுள்ள பெரியகட்டடத்தின் அடிவாரத்தில் வாத்தியஇசைக்கச் சேரி இரவில்நடக்கிறது. அங்கும்மக் கள் கூட்டமாகநின்று இசையைக் கேட்டு ரசிக்கிறார்கள். இந்தஊற்றடி யில் இரவுவேளையில் உட்கார்ந்திருந் தால்நேரம்போவதேதெரியாது

நான் மேலேகுறிப்பிட்டுள்ள பிரயா ணசேவைக்குரிய பஸ்ஒன்றின் மூலந் தான் பழையரோமாபுரியின் சின்னங் களைப்பார்த்தேன். அச்சின்னங்கள் சீரழிந்துகிடக்கின்றன. நல்லகாலமாக அழிந்தநிலையிலேயே இன்றும்அவை களைப் பாதுகாத்து வைத்திருக்கிறார் கள். பண்டையரோமாபுரி எத்தகைய உன்னதநிலையில் இருந்திருக்கவேண்டும் என்பதை நினைத்துப்பார்க்கும்படி அவைகள்செய்துவிடுகின்றன. 'கப்பிற் ரோலின்என்பது ரோமாபுரியின் ஏழு குன்றுகளில் ஒன்று. இங்குதான் ஆதி யில் "ஜுப்பிற்றர்" தெய்வத்திற்குரிய ஆலயத்தைக்கட்டினார்கள். அந்தக் கோயிலைத்தார்கியூனியஸ் பிறஸ்கஸ்என் பவர் கட்டத்தொடங்கினர். அவர் காலத்தில் கட்டடவேலை பூர்த்தியாக வில்லை. பின்னர்தார்கியூனியஸ் சூபர் பஸ்என்பவர் அதைக்கட்டிமுடித்திருந் தார். இந்தஆலயம் பலமுறை தீயினல் சேதமடைந்திருந்ததாம். மீண்டும் மீண்டும் அதைப்புதுப்பித்துக் கட்டி யிருக்கிறார்கள். பழையரோமாபுரி யிலே இக்கோயில் மிகவும்பிரதான மானதாய் இருந்திருக்கிறது. வெற்றி பெற்றவீரர்கள், தளபதிகள் ஜுப்பிற்றர் தெய்வத்திற்கு வணக்கம்செலுத்துவது வழக்கமாம். பிற்காலத்திலே இப்பகு தியில் வேறுபலஆலயங்களையும் கட்டி யிருந்திருக்கிறார்கள். இவற்றில்ஒன்று சனிபக்வானுக் குரியது. இந்தக்கோயி லின் சிலகம்பங்களே மாத்திரம் இன்று காணலாம். இந்தப்பழங்காலத்து ஆலயங்கள்எல்லாம் அழிந்துகிடக்கின் றன.

இன்றையதினம் கப்பிற்ரோலின் பகுதியில் நகரமண்டபம் இருக்கிறது. பிரசித்திபெற்றசிற்பி மைக்கல் ஆஞ்ச லோவினல் போடப்பட்ட மாதிரிப்படி கட்டப்பெற்ற சதுக்கத்தை இங்குபார்க் கலாம். சென்றற்றர்களின் அரண்மனை யும் நமதுகவனத்தை ஈர்ந்தது. மேலே குறிப்பிட்டுள்ள சதுக்கத்தில் 'மார்கஸ் அரீலியஸ்' என்பவரின் பழையரோமன் சிலை காணப்படுகிறது.

பொதுக்காரியங்களுக்குப் பயன் பட்ட திறந்தவெளியைப் பழங்காலத்து ரோமாபுரிவாசிகள் 'போறம்' என்று அழைத்தார்கள். இந்தப் 'போறம்' பலர்கூடும் பொதுஇடமாகப் பிறகு மாறியது. ரோமாபுரியில் 'பலற்றைன்' குன்றுக்கும், கப்பிற் ரோலின் குன் றுக்குமிடையே உள்ள பகுதிக்கு 'ரோமன்போறம்'என்று பெயரிட்ட னர். இது பழங்காலத்து ரோமன் நகரில் இதயஸ்தானமாகத் திகழ்ந்திருக் கிறது. இங்குதான் ரோமாபுரிவீரர் களின் ஞாபகசின்னங்களும், அவர்கள் வணங்கிய தெய்வங்களுக்கான கோயில் களும் கட்டப்பட்டன. இங்குதான் நீதிவான்கள்அமர்ந்துநீதிவழங்கியிருக் கிறார்கள். பழங்காலத்தில் இங்குதான் பலபிரசங்கிகள் மக்களைக்கூட்டிச் சொற்பொழிவாற்றியிருக்கிறார்கள். அந்தோனினஸ் சக்கரவர்த்தி தன்மனை வியின் ஞாபகார்த்தமாக இங்கு கோ யில்களைக் கட்டியிருக்கிறான். அவை களை இன்றுபார்க்கமுடியாது. ஆனல், அக்கோயில்களின் கம்பங்கள்மாத்திரம் இருக்கின்றன. இந்தப் 'போற'த்திற் குப் பின்னணியில் "டிடஸ்வளைவு" காணப்படுகிறது. எருசலேம்வீழ்ச்சி யின் ஞாபகசின்னமாக இந்தவளை வைக் கட்டினார்களாம். ஜூலியஸ் சீஸரின்உடலை எரித்தஇடத்தில் அமைக்கப்பட்ட ஒருபலிபீடமும் பழையசின்னங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. மொத்தத்திலே இப்பகுதி யில் காணப்படும் மூளியான தூண் களும், அழிந்துபோனகட்டடங்களும், ஒருகாலத்தில் ரோமாபுரி பலம்வாய்ந்த ஒருபேரரசுக்கும், நாகரிகத்திற்கும் 'நடுநாயகி'யாக விளங்கியிருந்திருக்கிற தென்பதைக்காட்டுகின்றன.

ரோமலஸ்என்பவர் முதன்முதலாக ரோமாபுரியை இப்பகுதியில்தான் நிர்மாணித்ததாக ஐதீகக்கதை அறிவிக் கிறது. ரோமாபுரியில் குடியரசு தலை தூக்கி யிருந்தபோது பணக்காரர்கள் இந்தக் குன்றுப்பிரதேசத்தில் வீடு களைக்கட்டிக்கொண்டு வாழத்தொடங் கினர்களாம். ஆனல், அகுஸ்தீஸின் ஆட்சிக்காலத்தில் இந்தப்பகுதி ரோமா புரிச் சக்கரவர்த்தியின் வாசஸ்தலமாக மாறிவிட்டதஎன்று பழையவரலாறு கூறுகிறது இப்பகுதிப் பழங்காலத் துக் கட்டடங்கள்எல்லாம் பாழடைந்து விட்டன. இங்குள்ள சீரழிந்துள்ள சுவர்கள் கி.மு. 600-ம்ஆண்டு கட்டப் பட்டதாகச்சொல்லப்படுகின்றது.

ரோமாபுரியில் அவசியம் பார்க்க வேண்டிய பழையகட்டடங்களில் 'கொலோஸியம்' (கொலிஸியம்) முக் கியமானதாகும். பார்ப்பவர்எவரையும் பிரமிக்கவைக்கும் மிகப்பெரிய 'காட்சி அரங்கம்' இது. வட்டமானகட்டட அமைப்புக் கொண்டது. இதன்முழு வடிவம் ஒருகுவளையைப் போன்றது. இந்தமகத்தான 'காட்சிமாளிகை'யின் நடுப்பாகத்தைச்சுற்றிப் படிக்கட்டுகள் போன்ற ஆசனங்கள்உண்டு. அவை களை அர்த்தசந்திரனைப்போல் அமைக் கப்பட்ட 'கலரி'கள்என்று கூறலாம். காட்சிமாளிகையில் நடக்கும் போராட் டங்களையும், போட்டிகளையும் கண்டு ரசிப்பவர்கள் உட்காருவதற்காகவே அவைகள் அமைக்கப்பட்டன.

(வளரும்)

ரூஷியாவுக்கு அல்ல, எமக்கே

— மொன்சிஞ்ஞோர் காசெல்லா சுவாமிகள் —

பாத்திமாவின்செய்திகளை ஒருங்கே திரட்டிப் பார்க்குமிடத்து, உலகத்துக் குச் சமாதானம்கொண்டுவரும் ஒழுங் குத்திட்டம் சம்பந்தமாய்த் தேவதா யார் ரூஷியாவையிட்டு யாதொன் றுமே கேட்கவில்லைஎன்பதை நிச்சய மாகநாம் கண்டுகொள்ளலாம். சமா தானத்தைக் கண்டடையும்பொறுப் பைப் பாத்திமாநாயகி அகிலமுழுவது முள்ள மற்றெல்லோரிலுமே—பிரதான மாய் என்னிலுமே, உங்களிலுமே ஒப்படைத்திருக்கின்றார்.

மாதாகூறியதாவது: "எனது வேண்டுகோள்களை உலகம் கருத்திற் கொண்டு ஒழுகிவருமானல் ரூஷியா மனந்திருப்பப்படும். சமாதானம்உண் டாகும். எனதுவேண்டுகோள்களை உலகம் மனதிற்கொண்டு ஒழுகாதிருக் குமானல் இந்தநாடு(ரூஷியா) யுத்தங் களையும், திருச்சபைக்குஎதிராக வேத கலாபனைகளையும் உண்டுபண்ணித் தனதுஅபத்தங்களை உலகமுழுவதும் பரப்பும். பரிசுத்தபிதாஅதிகம்வேதனைப் பட வேண்டியிருப்பார். அநேகநாடு கள் நிர்மூலமாக்கப்படும். ஆனல், ஈற்றிலே எனதுமாசற்றஇருதயம் வெற்றிகொள்ளும். பரிசுத்தபிதா ரூஷியாவை எனக்குநேர்ந்து ஒப்புக் கொடுப்பார். அதுமனந்திரும்பப்படும். சமாதான சகாப்தம்ஒன்று அருளப் படும்"என்பதே.

பாத்திமாநாயகிசொல்வதை அவதா னிப்போம். "எனதுவேண்டுகோள் களை உலகம் மனதிற்கொண்டு ஒழுகா திருக்குமானல்..." பாத்திமாவிலே மூன்று இடையப் பிள்ளைகளுடனும் நடத்தியசம்பாஷணைகளில் எப்போ தாவது நேரடியாக ரூஷியாவைச் சுட்டிப்புத்திபோதனையிலோஅன்றேல் எச்சரிக்கையிலோ அவர்பேசியதில்லை. ரூஷியாவுக்கு அனுப்பிவைக்கும்படி யாக அப்பிள்ளைகளிடம் ஓர்செய்தியை அவர் ஒப்படைக்கவில்லை. "எனது வேண்டுகோள்களை ரூஷியா மனதிற் கொண்டு ஒழுகாதிருக்குமானல்..." என்று அவர் சொல்லவில்லை. அவர் ரூஷியாவை முற்றுகவேகடந்து அப் பால்சென்றிருக்கின்றார்.

தமதுமுதற்காட்சியின்போது பாத்தி மாநாயகி அப்பிள்ளைகளுக்குச் சொன் னதாவது: "நீங்கள் செபமாலைசொல்ல வேண்டும்; அதைச் சரிவரச்சொல்ல வேண்டும்." இதிலே ரூஷியர்கள் செபமாலைசொல்லவேண்டும்; அதைச் சரிவரச்சொல்லவேண்டுமென்று அவர் சொல்லியதில்லைஎன்பதை நாம்அவதா னிக்கலாம்.

இச்சந்தர்ப்பத்தில் "தேவனுக்கு உங்களை அர்ப்பணஞ்செய்யவும், அவருக்குவிரோதமாகக் கட்டிக்கொள் ளப்படும் பாவங்களுக்குப்பரிகாரமாக வும், பாவிகளின் மனந்திரும்புதலுக் கான ஓர்பரிந்துபேசுதலாகவும் அவர் உங்களுக்குஅனுப்பச் சித்தங்கொள்ளு கின்ற துன்பதரிதங்களையெல்லாம் பொறுமையுடன்சகிக்கவும் நீங்கள் விரும்புகிறீர்களா? என்று அந்தஇடை யப்பிள்ளைகளை அவர்கேட்டார். இங்கேஅவர் ரூஷியமக்கள் தங்களை அர்ப்பணஞ்செய்யும்படி அவர்கேட்க வில்லைஎன்பதை நாம் அவதானிக் கலாம்.

அப்பிள்ளைகள் தங்கள்விருப்பத்தைத் தெரிவித்தபோது, பாத்திமாநாயகி மேலும்கூறியதாவது: "அப்போ நீங் கள் அதிகம்பாடுபட வேண்டிவரும்; ஆனல், தேவனுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் உண்டாவதாக; ஏனெனில், அவரேஉங்களைப் பலப்படுத்து வார்." இங்கேயும் "நீங்கள்அதிகம்பாடு பட வேண்டிவரும்..."என்றே அவர் சொன்னர். "ரூஷியா அதிகம்பாடு பட வேண்டிவரும்..."என்று அவர் சொல்லவில்லை.

இரண்டாவது காட்சியின்போது, காட்சிபெற்றபிள்ளைகளுக்குப் பாத்திமா நாயகிகூறியதாவது: நன்றிகெட்ட மனிதர் தங்கள்தேவதூஷணங்களா லும், நன்றியீனத்தாலும் ஒவ்வோர் நிமிஷமும் ஊடுருவும்படி செலுத்திய மூட்களால்சூழப்பெற்ற எனதுஇருத யத்தைப் பாருங்கள்! இல்லையென்று போனலும் சற்றுவதுஎன்னைஆற்று வதற்கு முயலுங்கள். எனக்குப் பரிகாரஞ்செய்யும்கருத்துடன் எவரா வது தொடர்பாக ஐந்துமாதங்களில் முதற்சனிக்கிழமையிலே பாவசங்கீர்த் தனஞ்செய்து, திவ்வியநற்கருணை பெற்று, செபமாலையில் ஐந்துகாரணிக் கங்கள்சொல்லி, செபமாலையின் பதினைந்துதேவஇரகசியங்களையும் தியானித்துக்கொண்டு என்னுடன் பதினைந்துநிமிஷங்கள் ஐக்கியப்பட்டி ருந்தால் மரணவேளையிலே இரட்சணி யத்துக்கு அவசியகம்வேண்டியவரப்பிர சாதங்களினல் அவர்களுக்கு உதவி செய்வதாக வாக்குப்பண்ணுகிறேனென்று அவர்களுக்குச் சொல்லுங் கள், மேலும் "செபம்செய்யுங்கள், அதிகம்அதிகம் செபஞ்செய்யுங்கள், பாவிகளுக்காகப் பரித்தியாகக்கிரிகை கள் செய்யுங்கள். எத்தனையோ ஆத்து மாக்கள் நரகத்துக்குப்போகிறார்கள். ஏனெனில், அவர்களுக்காகப் பரித்தி யாகக்கிரிகைகள்செய்வதற்கும், அவர் களுக்காகச் செபஞ்செய்வதற்கும் எவராவதுஇல்லை" என்றும் அவர்கூறி னர்.

இந்தஇரண்டாவதுகாட்சியிலே பாத்திமாநாயகி ஒருமுறையாவது ரூஷியாவைக் குறிப்பிடவில்லை. அவர் தமதுசெய்தியை "நன்றிகெட்ட மனித"னிலேயே திருப்பினர். செபஞ் செய்யும்படியும், பரித்தியாகமுயற்சி கள் செய்யும்படியுமே அவர் பிள்ளைகளி டம்கூறினர். இந்தவிண்ணப்பத்திலும் அவர் ரூஷியமக்களைச் சுட்டிக்காட்ட வில்லை.

மூன்றுவது காட்சியிலே, "நான் கேட்டுக்கொண்டதுபோல நீங்கள் செப மாலைசொல்லிக்கொண்டு வருகிறீர் களா?" என்று பாத்திமாநாயகி பிள்ளைகளைக் கேட்டார். "யுத்தம்முடி வடையும்படியாக அதைச்சொல்லி வரும்படி அவர்களைத்தூண்டினர். "நான்மாத்திரமே அதைமுடிவுக்குக் கொண்டுவரமுடியும்" என்று உறுதி வாக்குக்கூறினர். "உலகமுழுவதிலும் எனதுமாசற்ற இருதயப்பக்தியை ஸ்தாபிக்கவேண்டுமென்று தேவன் விரும்புகின்றார்; இது அவருடைய தண்டனைகளை விலக்குவதற்கு அதிக பலம்வாய்ந்த ஓர்வழிவகையாய் இருந் துவரும்" என்று "அந்தஅலங்கார நாயகி" கூறியதாக இந்தத்தடவை பிள்ளைகள் செய்திவெளியிட்டார்கள்.

பாத்திமாநாயகி இதிலும் தமது உறுதிமொழியையோ, எச்சரிக்கை யையோ, புத்திமதியையோ ரூஷியா வைக்குறித்துச் சொல்லவில்லைஎன்ப தை நாம் அவதானிக்கலாம். இந்த மூன்றுவதுகாட்சியிலும் அவர் ரூஷியா வைக் குறிப்பிடவில்லை." நான் உங்க ளுக்குச்சொல்வதை மக்கள்செய்தால் அநேகஆத்துமாக்கள் இரட்சிக்கப்படு வார்கள்; சமாதானம் உண்டாயிருக் கும்"என்று இச்சந்தர்ப்பத்திலே அவர்கூறிநின்றார். "மக்கள்செய் தால்".....

(தொடரும்.)

அணைகள் கண்டதாய்

அகிலமே போற்றுந்தாய்! அமலனின் அன்புத்தாய்! ஆசிகள் அருளுந்தாய்! அணைகள் கண்டதாய்! எழில் மிகு இலங்கையின் தென்திசைப்பகுதியில் மகோனை என்னும் ஒருகுக்கிராமம் இருந்துவருகிறது. கடலலைகளின் பேரிகைமுழக்கம் காதுக்கினிய கானமாகவும், இளந்தென்றல் இயற்கையின் விருந்தாகவும் அமைந்திருக்கும் இக்கிராமத்தின்மத்தியில் அமலோற்பவ மரியாயகிசபையினரின் பெரியமடம் ஒன்று கம்பீரமாகத் தோற்றமளிக்கிறது. இந்தமடத்திற்குச் செல்லும் பாதையில்பச்சைப்பசேலெனத் தோற்றம்அளிக்கும் பசியசோலைகளின்மத்தியில் செந்நெல்வளம்பொருந்திய வயல்களின்நடுவில் தோற்றமளிக்கின்றது அணைதைகளுக்கு ஆதரவளிக்கும் அர்ச். யோண்பொஸ்கோ அணைதைகள்சாலை. இதனைப்பரிபாலித்து வருகிறவர்கள் மரியாயின் பிரான்சிஸ்கன்சபைச் சந்நியாச சகோதரர்களான சங். சகோதரர் ஜேம்ஸ் எவ். பி. எம்., சங். சகோதரர் சிங்கராயர் எவ். பி. எம். என்பவர்களே.

இவர்கள் இரவுபகலென்றுபாராது, பசிபிணி நோக்காது இன்பத்திலும், துன்பத்திலும், எல்லாவற்றிலும் கலந்துறவாடி இந்தஅணைதைகளை ஆதரிக்கின்றனர். ஆனால், இச்சிறுவர்களை ஆதரிக்க இவர்கள்மட்டும் போதுமா? அரவணைத்துக்காக்க ஒருஅன்னைவேண்டாமா? இதனைஉணர்ந்துதான்மறைந்த மாபெரும்பாப்பு 12-ம்பத்திநாதர் — மரியாயின் பாப்பரசர் அணைதைகளுக்கு அடைக்கலமாக ஒருதாயைத்தெரிந்து அருளியிருக்கிறார். இந்தத்தாய்தான் அணைதைகளின் இராக்கினியென்று அழைக்கப்படுகிறவ. இந்தஇராக்கினியின் திருநாளைத்தான் அர்ச். யோண் பொஸ்கோமாணவர் 26-9-59 சனிக்கிழமை அதிசிறப்பாகக் கொண்டாடினார்கள்.

26-9-59 எப்போதுவருமென ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஏழைஉள்ளங்களைப் பூரிக்கச்செய்ய அந்நாளும் வந்தது. இருள்அரக்கனின் இரும்புப் பிடியினின்றும் இம்மானிலத்தை விடுவிக்கச் சூரியன்தங்கக்கம்பிகள்போன்ற தனது மெல்லியகதிர்களைச் சுந்தர பூமிக்குச் சுரந்துகொண்டிருந்தான். 6-45 மணியளவில் வண. ஜூலியஸ் விஜயசூரியா, ஓ. எம். ஐ. குரவரவர்களால் திவ்வியபலிபூசை நிறைவேற்றிச் சற்பிரசாதஆசீர்வாதம் அருளப்பட்டது. ஈற்றில் சங். சகோதரர் ஜேம்ஸ் எவ். பி. எம். அவர்கள் அணைதைகளின் இராக்கினியைப்பற்றி ஓர்இன்னுரை நிகழ்த்தினர். பின்னர் ஏழைச்சிறுரின் ஆனந்தஆக்களிப்புடன் திருநாள் இனிதே முடிவுற்றது.

எஸ். செபரட்ணம்,
யோண்பொஸ்கோ
அணைதைகள்சாலை மாணவன்.

தொ. இ. இராசையா அவர்களின் முதல் வருட மரண ஞாபகம்

பிறப்பு: 27—12—1879 இறப்பு: 21—10—1958

இவ்வுலகைவிட்டு மறைந்தும், எமது மனதைவிட்டு அகலாது என்றும் எம் நெஞ்சங்களுடனேயிருக்கும், எங்கள் பிரிய தந்தையாகிய தொம்மைப்பிள்ளை இராயப்பு இராசையா அவர்கள் இப்பூவுலகைவிட்டு மறைந்த முதலாம் வருட நினைவுதினம் 21-10-1959-ல் பூர்த்தியாகிறது. அன்று காலை 6-30 மணிக்கு மாதகல், அர்ச்.தொம்மைஅப்போஸ்தலர் ஆலயத்தில், இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஓர் திருப்பாடற்பூசை நிறைவேறும். இதனைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதகளையும், சங். சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகளையும், அன்புள்ள கிறிஸ்தவர்களையும் தேவன் இவருக்கு நித்திய இளைப்பாற்றியை அருளுமாறு மன்றாடும்படி தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

அரிய தந்தையின் பிரிவால் துயருறும்,
பிள்ளைகள்:

தொ. இ. பெனடிக்ற்,
தொ. இ. மரியதாசன் இராசரத்தினம்,
மேரிதிரேசா அந்தோனிப்பிள்ளை.

மாதகல்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 2629
யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்

அச்சேலு
இளையதம்பி முத்துத்தம்பி
— வழக்காளி.

எதிராக

ஊரெழு
1. முமலிங்கம் கந்தையாவும்,
2. பெண் பொன்மலரும்.
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2629-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு அண்டுக் காணியை 1959-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 12-ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அத்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல்வட்டி ரூபா 1914 சதம் 25-ம், இன்னும் ரூபா 1500-க்கு 5-1-1959 தொடக்கம், 4-6-1959 வரையும் 100-க்கு 9% வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரையும் 100-க்கு 5% வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 262-32½ சதம்.

காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் வளிகாமம் கிழக்குப்பகுதி, கோப்பாய் கோவிற்பற்று, உரும்பிராய் இறை "விளாணை" பர. நில. இலா. மூன்றும், குளி மூன்றும். (ப. நி. இ. 3. குளி 3·) வடமேற்கு மூலையில் இருக்கும் கிணற்றில் பங்கும், தென்னை, பலா, மா, பனைமரங்களும், அதற்குச்சேர்ந்தவைகளும்; செய்பயிர், வான்பயிர்களும். எல்லை: கிழக்கு —காகலிங்கம் கந்தையாவுக்கும், சகோதர சகோதரிகளுக்கும் உரிய ஆதனம். வடக்கு — இக்காணிக்கு வரும் பாதை முகப்பும், இளையதம்பி மயில்வாகனத்திக்கும், சகோதர சகோதரிகளுக்கும் உரிய ஆதனம். மேற்கு—சின்னப்பு குலத்துரைக்கும், முருகேசு பெண் மீனாட்சியினுடைய உரிமைக்காரருக்குரிய ஆதனம். தெற்கு—தம்பு சிவக்கொளுந்துக்கும், பெண் பொன்னம்மாவுக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனம்.

இக்காணியின் கிழக்கருகாக ஐந்திமுள அகலமுள்ள ஒழுங்கையால் வடக்கே இருந்து, இக்காணிக்குவரும் பாதைக்குப் போகும் உரித்தும், தென்மேற்கு தம்பர் சிவக்கொளுந்தும், பெண் பொன்னம்மாவுக்கும் உரிய காணியிலிருந்து இவ் ஒழுங்கைக்கு வரும் உரித்தும் புறகீங்கலாக. மிகுதி அடங்கலும், அதற்குச் சேர்ந்தவைகளும்.

D. N. ஆசீர்வாதம்,
9-10-59 கொம்மிஷனர்.

நன்றியறிந்த ஸ்தோத்திரம்

மகா பரிசுத்த யேசுவின் திருஇருதயத்தின் இரக்கத்தினாலும், எங்களுடைய அன்னையாகிய சதாசகாயமாதாவின் பேருதவியினாலும், அர்ச். சூசையப்பர், அர்ச். அன்னம்மாள், இனி ஆற்றுதி எனஅல்லலறும் வேளைகளில் தப்பாது ஆறுதல் அளிக்கும் வல்லமை அடைந்த பரிபாலகராகிய அர்ச். பூதா தேவேயு, அர்ச். அந்தோனியார், குழந்தையேசுவின் சின்னத்திரேசம்மாள், அர்ச். றீற்றம்மாள் இவர்களின் மன்றாட்டினாலும் எனக்கு ஒருகுழந்தைபிறந்ததற்கும், சுகப்பிரசவத்திற்கும் எனதுமுழு இருதயத்தோடும் நன்றிகூறி ஸ்தோத்திப்படிபிரசுரிக்கிறேன்.

ம. பே. அ. யோசவ்

* * *

நன்றித் துதி

நாங்கள் நீண்டகாலமாய்ப் பிள்ளை இல்லாதிருந்திக் கடைசியாகச் சதாசகாயமாதாவின் அனுக்கிரகத்தை இரந்து கேட்டுவந்தோம். அவவின் இரக்கத்தாலும், அர்ச். அந்தோனியார், அர்ச்.சவேரியார் முதலிய அர்ச்சியசிஷ்டர்களின் மன்றாட்டினாலும் நாங்கள் கேட்ட மன்றாட்டு கிடைக்கப்பெற்றோம். இன்னும் எனக்குச் சுகப் பிரசவத்தை அளித்து என்னையும்சேய் என் குடும்பத்தவரையும் ஆசீர்வதிக்குமாறு உவர்களை இரந்துவேண்டி நேர்த்தியின்படி இதனைப் பிரசுரிக்கிறேன்.

ஓர் அடியாள்.

* * *

நன்றித் துதி

கடந்த ஆடி மாதம் நடைபெற்ற பயங்கரப் பாதைப் படகு விபத்தில் நின்று எம்மைத் தடுத்துக்காப்பாற்றிய தாயே, அம்மா சதாசகாயமாதாவே, உமக்கு எங்கள் குடும்பத்தினரின் உள்ளன்புமிக்க நன்றியை இத்தால் பிரசித்தப்படுத்துகிறோம். தாயே உமது நாமம் வாழ்க.

சலமோன்பிள்ளை சவிரிமுத்து,
ஊர்காவற்றுறை.

* * *

நன்றியறிதல்

எனது சகோதரிக்கு செய்யப்பட விருத்த மிகக்கஷ்டமான சத்திரசிகிச்சையானது பரிசுத்த பிதா 12-ம்பத்திநாதரின் விசேஷ சலுகையால் எவ்வித ஆபத்துமின்றி முடிந்தது. அவவுக்குப் பூரண சுகம்கிடைக்க மன்றாடி, நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்.

மாதகல் அ. பிரகாசதாதர்.

நன்றியறிந்த தோத்திரம்

நானும், எனது குடும்பமும் மட்டக்களப்பு ஸ்ரேசனிலிருந்து காரில் வீட்டுக்குப்போனோம். போகும்பொழுது றெயில் வேய்க்கடையில் சாரதியின் கவலையீனத்தால் புகைவண்டியுடன் மோதும் தருணம், நாங்கள் யேசுவின் திருஇருதயமே எங்களைக் காத்திக்கொள்ளும், சதாசகாய மாதாவே எங்களுக்கு உதவியாய் வாருமென்று மன்றாடினோம். எங்களின் வேண்டுகோளின்படி, கார் மோதுண்டு சிறிதுதூரம் புகைவண்டி இழுத்துச் சென்றும், சிறுகாயமும் இல்லாமல் காப்பாற்றப்பட்டோம். கார் சேதமடைந்தது. இந்த அற்புத செயதியை நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

எஸ். எம். ரீ.

* * *

நன்றியறிந்த தோத்திரம்

எனது வயிற்றின் இடதுபக்கத்தில் காணப்பட்ட சீளமான கட்டிபோன்ற ஓர் வீக்கத்தைக்கண்டு மிகவும் பயந்து, என் ஏக நம்பிக்கையாகிய யேசுஅரசரிடமும், கோடி அற்புதர், முத். மாட்டீன் தெபொறஸிடமும் மன்றாடி, அவர்கள் கிருபையால் குணமானால் பாதுகாவலனில் பிரசுரம்செய்வதாக நேர்ந்துகொண்டேன். மறுநாளே யாதோர் அடையாளமும் இல்லாமல் புதுமையாகக் குணமடைந்தேன். எனது இருதயபூர்வமான நன்றியை அவர்களுக்குச் செலுத்துகிறேன். நேர்த்திப்படி இதனைப் பிரசுரம் செய்கிறேன்.

கொழும்பு, மே. பி. அ.

● பிரித்தானியின் யுத்தகாலபிரதமரான திரு. வின்ஸ்றன் சேர்ச்சில்அவர்கள் லண்டன்நகரின் வெளிப்புறத்தொகுதியான வூட்போட்டிங்கில் கன்சர் வேற்றில் கட்சிஅபேட்சகராகப் போட்டியிட்டு வெற்றிபெற்றிருக்கின்றார். இவருக்குத்தற்போது 84வயதாகிறது.

● பிரித்தானியிலே சென்ற8-ந்திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலிலே டட்லிஎன்றபகுதியில் மூவர் ஒட்டகங்கள்மீதுசென்று வாக்களித்தார்கள். இவர்கள் அங்குள்ள மிருகக்காட்சிச் சாலையைப் பராமரிப்பவர்கள். தேர்தலிலே லில்லி பர்போட்என்ற 70வயதுப் பாட்டி வாக்களிக்கும்போது மரணமானாள். ஸ்பென்சர் பல்டெல்என்ற 84 வயதுப்பாட்டனார் வாக்களித்தபின் மரணமடைந்தார்.

நேர்த்தியின் பூர்த்தி

எனது கனிஷ்ட குமாரத்திக்கு வயிற்றில் சிலஆண்டுகளாக ஓர்வித நோய் கண்டு, சிகிச்சைசெய்வித்தும் குணமுறுதிகண்டு, ஈற்றில் சதாசகாயமாதாவில் நேர்த்திவைத்து வேண்டுதல்புரிந்தோம். ஆச்சரியம்! மாதா கிருபையால் அத்த நோய் இருந்த இடமேதெரியாமல் மாயமாய் மறைந்ததின்பேரில் எங்கள் நன்றியையும், சந்தோஷத்தையும் தெரிவிக்கும் பொருட்டு நேர்த்திப்படி இதனைப் பிரசுரிக்கின்றோம். காலதாமதத்திற்காக வருத்தம் தெரிவித்து, மாதாவிடம் மன்னிப்புக்கோருகிறோம்.

இளவாலை, மிசெஸ். சி. எஸ். என்.

● கடல்நீரை நல்லகுடிதண்ணீராகச் சுத்தஞ்செய்ய அணுச்சக்தியால் இயங்கும் "காய்ச்சிவடிக்கும்" யந்திர சாதனம்ஒன்றை நிர்மாணிக்கும் ஓர் திட்டம்பற்றி ஹொங்கோங்அரசாங்கம் ஆலோசித்துவருகிறது. இத்தத்திட்டம் அங்கீகரிக்கப்படுமானால் 2,900 கோடிகலன் தண்ணீரைக்கொண்ட ஏரி ஒன்று தோற்றுவிக்கப்படும். இதற்கு 2கோடியே 20லட்சம்பவுண் செலவாகுமென்று பிரித்தானியநிபுணர்கள் மதிப்பிட்டிருக்கிறார்கள்.

● அந்தமான்தீவுகளில் இதுவரை பதினுபிரம்பேர் குடியேறியிருக்கிறார்கள். இரண்டாவதுதிட்டகாலம் முடிவடைவதற்குமுன் அங்குமேற்கொண்டு 2,500குடும்பங்கள் குடியேற்றப்படவிருக்கின்றன. 1953-ம்ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அந்தமான்தீவுக் குடியேற்றதிட்டத்தின்கீழ் ஒவ்வோர்குடும்பத்திற்கும் பத்துஏக்கர் வெறுங்காணியும், ஐந்துஏக்கர் நெற்காணியும், தென்னைமுதலிய னபயிரிட மேலும் ஐந்துஏக்கர்காணியும் வழங்கப்படுகின்றன.

● பிரித்தானியிலே சென்ற 8-ந்திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் கன்சர்வேற்றிவ் எனப்படும் பரம்பரைக்கட்சி பெரும்வெற்றி ஈட்டியிருக்கிறது. 620 ஸ்தானங்களிலும் கன்சர்வேற்றிவ்கட்சி 365 ஸ்தானங்களையும், தொழிற்கட்சி 258 ஸ்தானங்களையும், விபறல்கட்சி 6 ஸ்தானங்களையும் பெற்றிருக்கின்றன.

● சென்ற8-ந்திகதிநடைபெற்ற பிரித்தானிய பொதுத்தேர்தலில் போட்டியிட்ட கம்யூனிஸ்தஅபேட்சகர்கள் 18பேரும்ஒருங்கே படுதோல்வி அடைந்துள்ளார்கள். அளிக்கப்பட்ட வாக்குச்சீட்டுகளில் எட்டில் ஒருபங்கைப் பெறுதகாரணமாக அவர்கள் ஒவ்வொருவரும் 180பவுண்கட்டுப்பணத்தையும் இழந்துபோனார்கள்.

● வத்திக்கான்இராச்சியம் இம்மாதம் 27-ந்திகதியன்று இருபுதிய தபால்முத்திரைகளைப் பாவனைக்கு விடவிருக்கின்றது. இவற்றில் ஒன்று, றோமைநகருக்கு வெளியேயுள்ள வத்திக்கானின் புதியவானொலிநிலையத்தைக் காண்பிக்கும். மற்றது, றோமானியசதுக்கங்களிலுள்ள ஞாபகசின்னங்களைப் பிரதிபலிப்பதாயிருக்கும்.

வேதபோதக நாடுகளின் குரலொலி

"இவ்வுலக சம்பத்தையுடைய ஒருவன் தன் சகோதரன் கஷ்டப்படுகிறதைக் கண்டும், அவனுக்கு இரங்காமல் தன்னுள்ளத்தை முடிக்கொண்டால், தேவசிநேகம் அவனிடத்தில் நிலைப்பதெப்படி?" (1 அரு. 3: 17.)

"இந்த ஆட்டுக்கிடையைச் சேராத வேறு ஆடுகளும் எனக்குண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும். அவைகளும் என் தூற்சத்தத்தைக் கேட்கும்; அப்பொழுது ஒரே ஆட்டுக்கிடையும், ஒரே மேய்ப்பனும் ஆகும்." (அரு. 10: 16)

கடவுள் இருக்கிறாரா?

(புனிதவீரர்பக்கத் தொடர்ச்சி)

தங்களுக்குள்ளே சம்பாஷித்துக் கொண்டே சென்றனர்.

"நீர் என்ன காரியம் செய்தீர்? தக்க தருணத்தில் நான் கண்டுவிட்டேன்; அல்லாவிட்டால் உமதுகதி என்னவாகும்?" என்று அந்தப்பெண் திரு. சூசைப்பிள்ளையைக் கடிந்து கொண்டாள். அந்தப் பெண் வேறு யாருமில்லை. அவள்தான் கப்பலில் இருந்த பெண் உத்தியோகஸ்தர். இவள்தான் அவரைக் காப்பாற்றிய அந்த உருவம்.

"இல்லை அம்மணி! அன்று என்னைத் தடை செய்யாதிருந்தால் நான் எனது கண்மணிகளுடன் இன்ப சொர்க்கத்தில் இருந்திருப்பேனே" என்றார் சூசைப்பிள்ளை.

"என்ன, உமது பிள்ளைகளுடனா?" என்று வியப்புடன் கேட்டாள் அப்பெண்.

"அது ஒரு பெரியகதை" என்று ஆரம்பித்தவர் தனக்குநிகழ்ந்த இன்னல்கள் யாவையும் ஒன்றுவிடாமல் கூறிவிட்டார்.

"அப்பா!" என்று அலறினாள் அப்பெண். ஆம், அவள்தான் கமலா.

"என்ன, அப்பாவா?" என்று நிகைத்தபடி கேட்டார் சூசைப்பிள்ளை.

"ஆம், நான்தான் அப்பா உங்கள் அருமை மகள்; நாங்கள் இருவரும் அன்று நள்ளிரவிலே மீன்பிடிகாரரால் காப்பாற்றப்பட்டு முன்பின் அறியாத ஓர்இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு ஒருபெரிய வர்த்தகனிடம் ஒப்படைக்கப்பட்டோம். தற்போது எனதுஅண்ணா நீங்கள் வந்த கப்பற் தலைவனாகவும், நான் அக்கப்பல் உத்தியோகத்திலும் அமர்ந்து சீவியம் நடாத்துகிறோம்" என்று கதையை நிறுத்தினாள் கமலா.

"நம்பமுடியாத சம்பவம்; அதிசயமான கதை; அந்த இருளில் உங்களை யாரும் காப்பாற்றியிருக்கமுடியாது; ஆனால், நீயே என் கண்மணி கமலா என்பது உண்மை; உங்களை மனிதர் காப்பாற்றவில்லை; கடவுள்தான் காப்பாற்றினார்; எங்கே என் செல்வன், எங்கே என் பாலு?" என்று உரத்தசப்தமாகவே கேட்டார்.

"அதோ வருகிறார் அண்ணா!" என்றாள் கமலா.

அப்படியே அவர்கள் மூவரும் கோவிலுக்குச்சென்று கடவுள் மீண்டும் தங்களை ஒன்றுசேர்த்ததற்கு நன்றி தெரிவித்துவிட்டு வெளியேறினர்.

அப்பொழுது திரு. சூசைப்பிள்ளை உரத்தசப்தமாய்: "கண்மூடித்தனமாய் இதுவரையும் நான் கடவுள் இல்லையென்று ஓலமிட்டதெல்லாம் அதர்மமானது; கடவுளின் இராச்சியத்தைப் பரப்பும் முயற்சியை விட்டுச் சாத்தானின் இராச்சியத்தைப் பரப்ப முயற்சிசெய்து எனதுகாலம் வீணாகிவிட்டது; நான் தோல்வி அடைந்தேன்; நான்ஓர் தேவதுரோகி; ... ஆம், கடவுள் இருக்கிறார், இருக்கிறார்; அவர் இல்லாவிட்டால் உலகின் கதி என்ன?" என்று கூறிப் பெருமூச்சுவிட்டார்.

இதுவரை தான் செய்தவையெல்லாம் தவறென்று உணர்ந்து, அன்று முதல் அவர் "கடவுள் இருக்கிறார்" என்ற உண்மையைப் பரப்பத் தன்னால் இயன்றளவு பாடுபட்டுத் தன் குற்றத்தைப் பரிகரிக்கும் அலுவலில் ஈடுபட்டு உழைத்துவந்தார்.

— காவலூர் யோபு

உங்கள் விஷயதானங்களை
மேல்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்
"அண்ணா",
ஆர்ச். அன்னம்மாள் கோவில்,
பாண்டியந்தாழ்வு,
சுண்டிக்குளி.

சின்ன மாகிறேற் எங்கே?

(புனிதவீரர்பக்கத் தொடர்ச்சி)

அப்போது அந்த அறைக்குள்ளே பிள்ளைகள் எல்லோரும் வந்தார்கள். மாகிறேற் அவர்களை நன்றாக அறிவாள். அவர்கள் அவளுடைய வகுப்புச் சிறுவர்களும், சிறுமிகளுமே. ஒவ்வோர் பிள்ளையும் மாதாவண்டை சென்று தங்கள் ரோசாமலர்களை அவளிடம் கொடுத்தார்கள்.

மாதா புன்னகை புரிந்து ஒவ்வொரு பிள்ளைக்கும் நன்றி கூறினாள். "உங்களுடைய செபங்கள் உலகம் முழுவதுக்குமே உதவியாய் இருக்கின்றன" என்று அவள் கூறினாள்.

பின்புமாதா சுற்றுமுற்றும் பார்த்தாள். "எனது சின்ன மாகிறேற் எங்கே?" என்று கேட்டாள்.

என்ன செய்கிறது என்று மாகிறேற்றுக்குப் புரியவில்லை. மாதாவுக்குக் கொடுக்க அவளிடம் புஷ்பங்கள் இருந்தால்தானே. அவள் செபமாலை சொல்லவில்லையே.

"எனது சின்ன மாகிறேற் எங்கே?" என்று மாதா திரும்பவும் சொன்னதை மாகிறேற் கேட்டாள். கேட்டபடியே அவள் திடீரென நித்திரை கலைந்து எழுந்தாள். அப்போது தாய் அவளைத் தேடிக் கொண்டு வந்தாள்.

மாகிறேற் தாயிடம் போனதும் "அம்மா! இனிமேல் செபமாலை சொல்ல நான் ஒருநாளும் மறக்க மாட்டேன் பாருங்கள்" என்றாள்.

"அப்பா, அம்மா, அக்கா, அண்ணா, தம்பி எல்லோரும் வாருங்கள், செபமாலை சொல்ல" என்று சப்தமாக அழைத்தாள்.

அதன்மேல்மாகிறேற் தான்கண்ட கனவைப்பற்றி அவர்களுக்கு எடுத்துக்கூறினாள். பிறகு அவர்கள் எல்லோரும் செபமாலை சொன்னார்கள்.

சுபம்!

— புஷ்பம்.

லொறிக்கு ஏற்பட்ட விபத்து

காங்கேசன்துறைச் சப்ளை ஸ்ரேஷனிலிருந்து சென்ற ஞாயிற்றுக்கிழமை சாமான்கள் ஏற்றிக்கொண்டு, காங்கேசன்துறை—யாழ்ப்பாண வீதிவழியாக வந்துகொண்டிருந்த லொறி ஒன்று மல்லாகத்திலே சைக்கிள் ஒன்றுடன்மோதாது விலத்துகையில் வீதியைவிட்டுவிலகி விபத்துக்குள்ளாகிப் பெருஞ்சேதமடைந்தது. அதில்வந்த தொழிலாளர்கள் காயமடைந்து காங்கேசன்துறை ஆஸ்பத்திரியிலே அனுமதிக்கப்பட்டார்கள்.

மகாவலிகங்கைத் திட்டம்

மகாவலிகங்கையை வடமத்திய மாகாணத்துக்குத் திருப்புவது சம்பந்தமாய்த் தற்போது ஆராய்ச்சி செய்துவரும் அமெரிக்கநிபுணர்கள் தங்கள் திட்டவட்டமான அறிக்கையை வருகிறமார்கழி31-ந்திகதிக்கு முன் சமர்ப்பிக்கவிருப்பதாகக் காணி மந்திரி அறிவித்திருக்கின்றார். வடமத்தியமாகாணத்திலே, 50,000ஏக்கர்நிலத்தை நீர்ப்பாய்ச்சும் உத்தேசத்துடன் இத்திட்டம்பற்றிய ஆராய்ச்சிகள் பலமாதங்களாக நடைபெற்றுவருகின்றன.

தண்ணீர்த் தட்டுப்பாடு

ஊர்காவற்றுறைப்பகுதி மக்கள் இன்று தண்ணீர்த்தட்டுப்பாட்டால் கஷ்டப்படுவது போல இதற்குமுன் என்றுமே கஷ்டப்பட்டதில்லை; இப்போது அப்பகுதியிலே தண்ணீர்த் தட்டுப்பாடு உச்சநிலை அடைந்திருக்கிறது; இந்தநிலையிலிருந்து அப்பகுதியைப் பாதுகாக்க அங்குள்ள பட்டினசபை, கிராமச்சங்கங்கள் ஒத்துழைத்து ஆவனசெய்ய முன்வரவேண்டுமென ஊர்காவற்றுறைப் பட்டினசபைத்தலைவர் தெரிவித்திருக்கிறார். அங்கே ஓர் குடும்பத்துக்குச் சேர்ந்தவளவாய், அக்கம்பக்கமாக இருவளவுகளிலுள்ள மூன்று கிணறுகளுமே வற்றியிருக்கக் காணப்பட்டன.

உங்களுக்குத் தெரியுமா?

By Scio

பணம் சம்பந்தமான எந்தக் கணக்கைப் பார்த்தாலும் ஒரு சுழல்துப்பாக்கித் 'தோட்டா'வின் பெறுமதி கொண்டு ஓர் ரொட்டியை வாங்கமுடியும். ஒரு போர்க் கப்பலைக் கட்டுவதற்குச் செலவாக ஏற்படும் பணத்தைக் கொண்டு நூற்றுக்கு மேற்பட்ட நகரங்களில் இக்காலமாதிரியான செங்கற் கட்டட பாடசாலைகளை அமைத்துக் கொடுக்க முடியும்.

இரண்டாவது உலக யுத்தத்தில் ஈடுபட்ட சகலநாடுகளுக்கும் ஏற்பட்ட மொத்தச் செலவு பணம் 13,00,00,00,00,00 டலராகும். அந்த யுத்தத்திலே 2,20,60,000 பேர் கொல்லப்பட்டார்கள். 3,43,00,000 பேர் காயமடைந்தார்கள். அதனால் மொத்தமாக 5,63,60,000 மக்கள் கொல்லப்பட்டும், காயமடைந்தும் போனார்கள்.

மனிதனின் நாகரீகம் இற்றைக்கு 7,000 வருடங்களின் முன் உதயமாயிற்றென்று சில சரித்திராசிரியர்கள் கூறுகின்றார்கள். வேட்டையாடுவதிலிருந்து விவசாயத்திற்கு மனிதன் திரும்பியதையே அடிப்படையான அத்தாட்சியாகக் கொண்டு அவர்கள் இவ்விதம் கணக்கிட்டுத் தெரிவித்திருக்கிறார்கள்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, October 15-1959.